யாழ்ப்பாணம்

பக்கங்கள் எட்டு:
விலை ரூபா 5-00

Registered as a News Paper in SriLanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு2032 வைகாசி 09 புதன்கிழமை 23-05-2001 தொலை பேசி: 3378 ஒலி: 155

அசல் 22 கரட் தங்க
நகைகளுக்கு யாழ் நகரில்
சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-2014)

## ★ புலிகளின் கோரிக்கையால் அரசுக்கு இக்கட்டான நிலை

# மக்களுக்கு தெரிவித்தபின்னரே
# புலிகள் மீதான தடை நீக்கப்படும்!

### அமைச்சர் அனுரா பிரியதர்சன யாப்பா அறிவிப்பு!

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குவது தொடர்பாக அரசாங்கம் இதுவரை எந்தவிதமான முடிவுக்கும் வரவில்லை. அப்படி ஏதாவது ஒரு முடிவுக்கு அரசாங்கம் வருமானால் அது மக்களுக்குத் தெரியப்படுத்திய பின்பே விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்படும் என்று தொடர்பு சாதன அமைச்சர் அனுரா பிரியதர்சனயாப்பா தெரிவித்துள்ளார்.

இதேவேளை விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குவது தொடர்பாக அமைச்சரவை நாளை கூடி ஆராயவுள்ளதாகவும் அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

—இனப்பிரச்சினை சம்மந்தமாக சுமூகமான சூழ்நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தையைத்தொடர தமிழீழ விடுதலைப்புலிகள்தம்மீதான தடையை நீக்குமாறுநோர்வேயின் சமாதானத்தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் மூலம் அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

விடுதலைப்புலிகளின் இக்கோரிக்கை தொடர்பாக ஜனாதிபதிசந்திரிகாசிரேஷ்ட அமைச்சர்கள, படை அதிகாரிகள், சட்டவல்லுநர்களுடனும் பலமுனைப்பேச்சுக்களை நடாத்தியிருந்தார்.

[8ஆம் பக்கம் பார்க்க]

### முகமாலையில் 4படையினர் காயம்

(யாழ்ப்பாணம்)

முகமாலைப் பகுதியில் புலிகளின் பதுங்குகுழிகள்மீது படையினர்தாக்குதல்நடத்தியதாக விசேடஊடகத் தகவல்நிலையம் அறிவித்துள்ளது.

இத்தாக்குதலின் போது படைத்தரப்பில்நான்குபடையினர் காயமடைந்ததாகவும் விடுதலைப்புலிகள் தரப்பில் பத்துப்பேர்வரை காயமடைந்திருக்கலாமென்றும் மூன்று பதுங்குகுழிகள் அழிக்கப்பட்டதாகவும்ஊடகத்தகவல் நிலையம் மேலும்தெரிவித்துள்ளது. [ந-5]

### வாகன விபத்து கோப்ரல் பலி

(குருநாகல்)

குருநாகல் கண்டி வீதியில் இராணுவத்தினர் பயணம் செய்த வாகனமும் பிறிதொரு வாகனமும் மோதியதில் இராணுவக் கோப்ரல் ஒருவர் கொல்லப்பட்டும் 100 இராணுவத்தினர் காயமடைந்துமுள்ளனர்.

குருநாகலில் இருந்து கண்டிக்கு சென்ற பஸ் வண்டியும் கண்டியில் இருந்து கொழும்பு நோக்கி வந்த பஸ்வண்டியுமே விபத்துக்குள்ளானதாகும்;

இந்த விபத்தில் எம். எம். ஆர். இலக்தாஸ் (வயது 28) இராணுவக்கோப்ரல்ஒருவரே கொல்லப்பட்டவராவர். (வ)

### அமெரிக்கா சென்ற எரிக்சோல் லண்டன்சென்றுபாலாவைசந்திப்பார்

(கொழும்பு)

நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக்சோல்ஹெய்ம்தனது உத்தியோக பூர்வ அமெரிக்கப் பயணத்தை முடித்துக்கொண்டு, அமெரிக்கா அரசின் சாதகமான முடிவுகளுடன் லண்டன் செல்லவுள்ளாரென இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன;

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் சமரசப் பேச்சுக்களை ஆரம்பிக்க விடுதலைப் புலிகள் மீதான தடை முட்டுக் கட்டையாக அமைவதனால் அத்தடை நீக்கம் பற்றி எரிக்சோல்ஹெய்ம் ஜனாதிபதி சந்திரிகாவுடன் பேச்சு

(8ம் பக்கம் பார்க்க)

### இராசவீதியில் ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

இராசவீதி நீர் வேலியில் நேற்று இரவுவேளை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்ததாகக் கூறி கனகசிங்கம் இரத்தினசிங்கம் (வயது-35) என்பவர் யாழ் போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் எவ்வாறு நிகழ்ந்ததென்பது பற்றிய தகவல் எதுவும் தெரிய வரவில்லை. [ந]

### இளம் குடும்பஸ்தர் தாக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டைப் பகுதியில் இளமகுடும்பஸ்த ஒருவர் இனம தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு படுகாயமடைந்தநிலையில் யாழ் மருத்துவமனையில அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பூ. செல்வகிருஸ்ணன் என்பவரே காயமடைந்தவராவார். (ந-10)

### யாழ். போதனாவைத்தியசாலை

### இளைஞர் சுட்டுக் கொலை

(வவுனியா)

நோக்கி வந்த பஸ்வண்டியுமே விபத்துக்குள்ளானதாகும்.

இந்த விபத்தில் எம். எம். ஆர். இலக்தாஸ் (வயது 28) இராணுவக்கோப்ரல்ஒருவரே கொல்லப்பட்டவராவார். (வ)

## பிஸ்ரல் குழுவுக்கு பொலிஸ்பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்முனை நகரில் நேற்றுக் காலை பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் விடுதலைப் புலிகளின்பிஸ்டல் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கல்முனை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் வி. விபுலரத்தின என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

இரவு நேரக் காவல்கடமையை முடித்து விட்டு காலை பொலிஸ்நிலையத்துக்குத்திரும்புகையில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. [இ]

## கதிர்காமர் மாலைதீவில்

(கொழும்பு)

சார்க்மகாநாட்டைநடாத்துது தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் முகமாக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன்கதிர்காமர் மாலைதீவுக்கு பயணமாயுள்ளார். (இ)

கா அரசின் சாதக சமரசப் பேச்சுக்களை ஆரம்

(8ம் பக்கம் பார்க்க)

### யாழ். போதனாவைத்தியசாலை

# பணிப்பாளர் டாக்டர் நவமலர் பதவியை ராஜினாமாச் செய்தார்?

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி(செல்வி) நவமலர் கனகரட்ணம் தனதுபதவியை நேற்று ராஜினாமாச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இவ் ராஜினாமாக்குறித்து இச்செய்தி எழுதும்வரை உறுதிப்படுத்த முடியவில்லை.

இதேவேளையாழ்மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் கடந்த 18ஆம் திகதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றபோது, வலிமேற்குப்பிரதேச சபைத தலைவர் என். திரிலோகநாதன் வைத்தியசாலைப்பணிப்பாளர் மீதுசில குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியிருந்தார்.

(8ம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தடையை உடன் நீக்க வேண்டும்

### றுகுணு மக்கள் கட்சி வேண்டுகோள்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடைய உடனடியாக நீக்கி, யுத்த நிறுத்தத்தை பிரகடனம் செய்து விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும்.

றுகுணு மக்கள் கட்சிச் செயலாளர்றுகுணு சொஷ்சா நேற்று வெளியிட்ட அறிக்கை மூலம் மேற்கண்டவாறு அரசைக் கோரியுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் இருபதாண்டுகால யுத்தத்தினால் பெரும் துன்பங்களுக்கும் கஸ்ரங்களுக்கும் ஆளாகியுள்ளனர்.

[8ஆம் பக்கம் பார்க்க]

## அமைச்சர் மகிபால மீது நம்பிக்கையற்றபிரேரணை

### பாராளுமன்றில் நேற்று சமர்ப்பிப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் கிராமிய கைத்தொழில் அமைச்சர் மகிபால ஹேரத் மீது ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியும் இணைந்து நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை நேற்று பாராளுமன்றத்தில்

8ஆம் பக்கம் பார்க்க

## இளைஞர் சுட்டுக் கொலை

(வவுனியா)

மன்னார் முருங்கன் பொலிஸ் பிரிவில கற்கடத்த குளம் பகுதியில இனந்தெரியாதோரால் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லபபட்டுள்ளார்.

நேற்றுமுன்தினமிரவு இடம் பெற்ற இச்சமபவததில கற்கடந்த குளம் பகுதியில் உள்ள அகதி முகாமில் வசிததுவரும் நெப்போலியன் (வயது 34) என்பவரே கொல்லபட்டவராவார்.

சுட்டுக் கொல்லப்பட்ட நெபபோலியன் இராணுவத்தினருடன் நெருங்கியதொடர்புள்ளவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது [ய]

## பஸ் கட்டணம் உயராது

[கொழும்பு]

பஸ்கட்டணம் யூன் முதலாம் திகதி அதிகரிக்கப்படமாட்டாதெனபோக்குவரத்து அமைச்சர் தினேஸ் குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

பஸ் உரிமையாளர்களுடன் நேற்று நடாத்திய பேச்சுக்களின்போது இதுதொடர்பாக உடன்பாடு ஏற்பட்டதை

(8-ம் பக்கம் பார்க்க.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## நாடக ஆற்றுகை தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் இறுதியாண்டு மாணவர்களின் 'சிதறல்கள்' நாடக ஆற்றுகை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று பி. ப 4 30 மணிக்கு திருமறைக் கலாமன்ற அரங்கில் இடம் பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் ஆர்வலர்கள் கலந்து கொண்டு தமது கருத்துக்களை வழங்கலாம் என நாடக ஆற்றுகைக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (உ-59)

## நூலக வாரம் அனுட்டிப்பு

(அரியாலை)

சென் ஜோன்ஸ் கல்லூரியில் நூலகவாரம் 22 ஆம் திகதி செவ்வாய்கிழமைதொடக்கம் 25ஆம்திகதி வெள்ளிக்கிழமை வரை கொண்டாடப்படுகிறது.

இறுதி நாளான எதிர்வரும் வெள்ளிக்கிழமை கல்லூரியில் நடைபெறவிருக்கும் நூலக வார இறுதி நாள் நிழ்வில், குடாநாட்டின் அரும் பொருள் தொல் பொருள் சேகரிப்பாளரும் ஆய்வாளருமான மாமனிதர் கலைஞானி அ. செல்வரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

நூலக வாரத்தை ஒட்டி மாணவர்களிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசில் வழங்கலும் அன்றைய தினம் இடம்பெறும்.

(உ-106)

## வீதிகள் துப்புரவு

(யாழப்பாணம்)

ஈச்சமோட்டைப் பகுதியில் உள்ள பல வீதிகள் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது.

பேலும்கொழும்புத்துறைப் பகுதியில் உள்ள கடற்கரை வீதிப்பகுதியும் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது.

இதற்கான ஏற்பாடுகளை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியனர் மேற்கொண்டுவருகின்றனர். (உ-10)

#### மதுவரித்திணைக்கள

# உத்தியோகத்தர் மீது சட்டவிரோத மது உற்பத்தியாளர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மதுவரித்திணைக்கள உத்தியோகத்தர்கள் சட்டவிரோத மது உற்பத்தியாளர்களால் தாக்கப்பட்ட சம்பவம் கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி பகுதியில் சட்ட விரோதமாக மது உற்பத்தி இடம்பெறுவதாக அறிந்த மதுவரித்திணைக்கள உத்தியோகத்தர்கள் அவ்விடம் விரைந்து சென்றபோது.

சட்டவிரோத மது உற்பத்தியாளர்கள் அவர்களை போலித்துப்பாக்கி, கற்கள், வெற்றுப் போத்தல்கள் கொண்டுதாக்கியதுடன். வாகனத்தையும் சேதப்படுத்தியுள்ளனர்.

இருப்பினும், மேற்படி பகுதியில் இருந்து நூறு லீற்றர் கசிப்பு உற்பத்தி செய்யும் திரவத்தையும்,

பெருந்தொகையான உபகரணங்களையும் பறிமுதல் செய்துள்ளனர்.

இதேவேளை, மேற்படித் தாக்குதலில் ஈடுபட்டவரான யோகராசா அகிலன் என்பவரது தந்தையான அன்ரனிப் பிள்ளையை கைது செய்த பொலிஸார்,

நேற்று செவ்வாய்க் கிழமை யாழ் நீதவான் முன் ஆஜர் செய்தபோது ஒரு இலட்சம் ரூபா அரச ஆட்பிணையிலும் 25 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டதுடன்,

சம்பந்தப்பட்ட இளைஞரான யோகராசா அகிலன் என்பவரை கைது செய்து மன்றில் ஆஜர் செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டார்.

(உ-6)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

மே மாதம் 15 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றது.

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 103060 ஏ | 182021 ஏ |
| 188910 ஏ | 188910 பி |
| 189606 ஏ | 189606 பி |
| 189610 ஏ | 189620 ஏ |
| 190881 ஏ | 190881 பி |
| 190881 சி | 191060 ஏ |
| 191060 பி | 191083 ஏ |
| 191091 ஏ | 191132 ஏ |
| 191132 பி | 191132 சி |
| 191132 டி | 191170 ஏ |
| 191170 பி | 191170 சி |
| 193029 ஏ | 193029 பி |
| 193029 சி | 193031 ஏ |
| 193041 ஏ | 193105 ஏ |
| 193105 பி | 193105 சி |
| 193105 டி | 193112 ஏ |
| 193112 பி | 193191 பி |
| 193204 ஏ | 193204 பி |
| 193227 ஏ | 193227 பி |
| 193238 ஏ | 193238 பி |
| 193270 ஏ | 193270 பி |
| 193282 ஏ | 193360 ஏ |
| 193360 பி | 193391 ஏ |
| 193391 பி | 193396 ஏ |
| 193408 ஏ | 193412 ஏ |
| 193412 பி | 195193 ஏ |
| 195193 பி | 195194 ஏ |
| 195194 பி | 195194 சி |
| 195194 டி | 195194 ஈ |
| 195194 எவ் | 195216 ஏ |

### கோப்பாய்

| | |
|---|---|
| 180181 ஏ | 190808 ஏ |
| 190808 பி | 191039 ஏ |
| 193022 ஏ | 193066 ஏ |
| 193099 ஏ | 193099 பி |
| 193099 சி | 193100 ஏ |
| 193100 பி | 193183 ஏ |
| 193183 பி | 193317 ஏ |
| 193356 ஏ | 193356 பி |
| 193356 சி | 193409 ஏ |

### நல்லூர்

| | |
|---|---|
| 103226 ஏ | 103226 பி |
| 182010 ஏ | 182010 பி |
| 183217 பி | 184695 ஏ |
| 186286 ஏ | 186286 பி |
| 188903 ஏ | 188903 பி |
| 189003 ஏ | 189004 ஏ |
| 189013 ஏ | 190847 ஏ |
| 190847 பி | 190847 சி |
| 191113 ஏ | 191121 ஏ |
| 191154 ஏ | 191175 ஏ |
| 191200 ஏ | 191200 பி |
| 191230 ஏ | 191230 பி |
| 191230 சி | 191230 டி |
| 191232 ஏ | 191232 பி |
| 191232 சி | 191232 டி |
| 191232 ஈ | 193021 ஏ |
| 193021 பி | 193090 ஏ |
| 193090 பி | 193104 ஏ |
| 193104 பி | 193128 ஏ |
| 193132 ஏ | 193132 பி |
| 193156 ஏ | 193157 ஏ |
| 193157 பி | 193168 ஏ |
| 193168 பி | 193168 சி |
| 193174 ஏ | 193174 பி |
| 193174 சி | 193174 டி |
| 193174 ஈ | 193174எப் |
| 193191 ஏ | 193208 ஏ |
| 193208 பி | 193217 ஏ |
| 193217 சி | 193272 ஏ |
| 193305 ஏ | 193305 பி |
| 193314 ஏ | 193314 பி |
| 193314 சி | 193394 ஏ |
| 193397 ஏ | 193404 ஏ |
| 193404 பி | 193414 ஏ |
| 193414 பி | 193463 ஏ |
| 193482 ஏ | 195157 ஏ |
| 195199 ஏ | 195199 பி |

## பங்காளர்கள் தெரிவு

(மானிப்பாய்)

கெயர் சர்வதேச நிறுவனத்தினரின் இயலளவு உருவாக்கல் திட்ட பங்காளர்களாக சண்டிலிப்பாய்பிரதேச செயலர்பிரிவில்நவாலிமுருகானந்த சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கமும் பண்டத்தரிப்பு மகளிர் சிக்கன கூட்டுறவுச் சங்கமும் தெரிவு செய்யப் பட்டுள்ளன,

கெயர் சர்வதேச நிறுவனத்தினர், யாழ். குடா நாட்டில் இயலளவு அபிவிருத்தித் திட்டமொன்றின் நுண் நிதி சார் சேவைகளுக்கு வழங்கி வருகின்றன.

இத்திட்டத்தின் பயன்கள் சண்டிலிப்பாய் பிரதேச எல்லைக்குள் வசிக்கும் பயனாளிகள்நன்மையடைவாரென்று தெரிவிக்கப் படுகிறது. (உ-120)

## அதிபர்கள் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

உடுவில் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான மாதாந்தக் கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி பிற்பகல் 2 30 மணியளவில் உதவிக்கல்விப்பணிப்பாளர் அ. தற்பரானந்தன் தலைமையில் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (உ-2)

## முதலாம் இடம்

(ஆவரங்கால்)

கடந்த 16 ஆம் திகதி யா. ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் இடம் பெற்ற வலிகாம வலய மட்ட உடற் பயிற்சிப் போட்டியில் யா/ ஆனைக் கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (உ-7)

---

**சைவ சமய. . .**

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள் என்று பெரும் மூச்சு விடுமளவிற்கு புனிதமான சைவசமய விவகார குழுவிற்குக் களங்கம் வந்துள்ளது.

### சிவபாலன் முதல்வராக பதவி ஏற்பு

திருமதி சறோஜினி யோகேஸ்வரன் கொல்லப் பட்டதையடுத்து சிவபாலன் அவர்கள் முதல்வராக பதவியேற்றார். மிகவும் நல்ல மனிதர், தெய்வபக்தி உடையவர், தமிழறிவு மிகுந்தவர், ஊழியர்களை மதித்தவர்.

சைவ சமய விவகாரக்குழு மீது மிகுந்த பற்றுக் கொண்டவர். அக்குழுவுக்கு எதிராக சிவபாலன் அவர்களை திசை திருப்ப எத்தனையோ பேர் முயற்சித்தனர். அதற்கு அவர் அசயவில்லை காரணம் முதல்வர் பதவியின் கனதி அவருக்கு நன்றாக விளங்கியிருந்தது.

அவரின் காலத்தில் நல்லைக் குமரன் மலரின் 7வது வெளியீடு இடம் பெற்றது. திருமதி யோகேஸ்வரன் முதல்வராகப் பதவியேற்ற போது அவர் தரப்பிலிருந்தவர்கள் 'உரியவர்களிடம்' அனுமதிபெற்றே முதல்வர் பதவி பொறுப்பேற்கப்பட்டது என்றவதந்தியைப் பரப்பியிருந்தனர். இவ்வதந்தியை உண்மையென்றே மக்களும் கருதினர். ஆனால் திருமதி சறோஜினி சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தியுடன் மக்கள் எதையுமே நம்பவில்லை.

இதன் பின்பு முதல்வராகப் பதவியேற்ற சிவபாலனுடன் நெருக்கமான உறவு வைக்க எவரும் விரும்பவில்லை. அது மட்டுமன்றி யாழ். மாநகர சபை எல்லைக்குள் இயங்கும் சனசமூக நிலையங்களோ அன்றி பொது அமைப்புக்களோ தமது விழாக்களுக்கு ஆணையாளரை பிரதமவிருந்தினராக அழைத்தனரேயொழிய, முதல்வரை கிட்டவும்அடுக்கவில்லை. அதற்குக் காரணம் என்னவெனில் அது ஆத்மார்த்தமாகப் புரிந்து கொள்ள வேண்டியது.

[நாளை தொடரும்]

## இராசி பலன்

23-5-2001

(வைகாசி 9, புதன்)

அமாவாசைமு; ப 9. 07வரை

கார்த்திகை ந;ப12. 14 வரை

ராகுகாலம் 11;52 - 1; 22

நல்லநேரம் 04; 22- 05; 52

அமிர்தசித்தம்

**மேடம்**

வீண்வாக்கு வாதம், பொருள்விரயம், கௌரவக் குறைவு, காரியதாமதம்.

**இடபம்**

ஜனவசியம் நண்பர்கள் உதவி, போசனசுகம், பெரியோர் மதிப்பு.

**மிதுனம்**

நித்திரைக் குறைவு, பணச் செலவு காரியதாமதம், கோபப் படுதல்.

**கடகம்**

காரியம் கைகூடும், தனலாபம், குடும்பசுகம்,கௌரவம்.

**சிங்கம்**

காரியஜெயம், தொழில் லாபம், அதிகாரம், சுப நிகழ்ச்சி.

**கன்னி**

நிலைமாற்றம், புதியதிட்டம், பிரயாணம், வியாதி,

**துலாம்**

பிரயாணபயம், வீண்பிரச்சனைகாரியதடங்கல், வியாதி ஏற்படல்.

**விருச்சிகம்**

பொசனசுகம், சுவாரஸ்யம் முயற்சி கைகூடும், பிரயாணம்.

**தனுசு**

சந்தோசமானசம்பவம், காரியநன்மை, சத்துருஜெயம் வியாதி குணமடைதல்.

**மகரம்**

மனக்கவலை, குடும்பக் கவலை. காரியதாமதம், கௌரவக்குறைவு.

**கும்பம்**

மனச்சஞ்சலம், உறவினர் மனஸ்தாபம், முயற்சிதாமதம், வேண்டாத உறவு.

**மீனம்**

காரியஅனுகூலம், வாக்கு மேன்மை, அன்னியர்சந்திப்பு தனவரவு.

வளவன்


இலங்கை மின்சார சபை யாழ் பிரதேசம்

**மின் தடை பற்றிய**

## அறிவித்தல்

காங்கேசன்துறை மின் நிலையத்தில் அவசரதிருத்த வேலைகள் செய்ய வேண்டியுள்ளதால் 26-05-2001 சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பி ப. 5 00 மணி வரை யாழ்ப்பாண குடாநாடு பூராகவும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்பதனை மின் பாவனையாளருக்கு அறியத் தருகிறேன்.

இதனால் ஏற்படும் சிரமங்களுக்காக மனம் வருந்துகிறேன்.

பிரதேச மின் பொறியியலாளர்
இலங்கை மின்சார சபை,
யாழ். பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

''சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்''
இலங்கை மின்சார சபை.

[கி/2018]



## அலங்கார உற்சவம்

பருத்தித்துறை அருள்மிகு பன்னையம்பதி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 26-5-2001 சனிக்கிழமை தொடக்கம் தொடர்ந்து 10 தினங்கள் அபிஷேகம், விஷேஷ பூஜைகளுடன் இடம் பெறும்.

தர்மகர்த்தா

(கி-2017)



வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## அறிவித்தல்

கலைமாணி/ வணிகமாணி மற்றும் சிறப்புக் கலைமாணி 1997 பட்டச் சான்றிதழ்கள் வழங்கல்

1997 கலைமாணி வணிகமாணி மற்றும் சிறப்புக் கலைமாணிப் பட்டச் சான்றிதழ்களை 25.05.2001 (வெள்ளிக் கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில்உரியவர்கள் நேரடியாகவந்து பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேற்படி பட்டச்சான்றிதழ்களுக்கான கட்டணமாக ரூபா 150/- யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக்கிளையில் செலுத்தப்பட்டு அதற்கான பற்றுச்சீட்டு வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

பதிவாளர்,

(கி/ 2019)

# விசாரணைகளின் போது கிராம அலுவலர்கள் சமுகமளிப்பது அவசியம்

(யாழ்ப்பாணம்)

காணாமற்போனோர்விசாரணைகள் தொடர்பாக பத்திரிகைகள் வாயிலாக அழைக்கப்படும் அனைத்து கிராம அலுவலர்களும் தவறாது சமுகமளிக்க வேண்டும் என குற்றத்தடுப்புப் புலனாய்வுப் பிரிவினர் மீண்டும் வலியுறுத்தியுள்ளனர்.

காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ள காரணத்தினால் இவ் விசாரணைகளை உறுதிப்படுத்தும் வகையில் சம்பந்தப்பட்ட கிராம அலுவலர்கள் சமுகம் கொடுப்பது அவசியம்எனவும் தெரிவித்துள்ளனர். (உ-10)

# பள்ளிவாசல்களின் புனிதத்தை பேணுமாறு பௌஸி கோரிக்கை

[கொழும்பு]

பள்ளிவாசல்களிலிருந்து ஆர்ப்பாட்டங்களை ஆரம்பிப்பது மற்றும் ஆர்ப்பாட்டங்களுடன் தொழுகைக்கான இடங்களை சம்பந்தப்படுத்துவதை முஸ்லிம்கள் நிறுத்த வேண்டும்.

பள்ளிவாசல்களின் புனிதத்தைப் பேணவேண்டும் என்று அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி கோரிக்கை விடுத்துள்ளார்.

அல்லாவின் பெயரால் இதனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். [உ]

# மீளக் குடியமர விரும்பும் மக்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

கைதடி, நாவற்குழி, மட்டுவில், சங்கத்தானை, கச்சாய், அல்லாரை, சரசாலை ஆகிய பிரதேசங்களில் இருந்து இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கு ஏதுவாக, மீளக் குடியமர விரும்பும் மக்களை நேற்று முதல் இம் மாதம் 30 ஆம் திகதி வரை குறிப்பிடப்படும் நிலையங்களுக்கு சமுகமளிக்குமாறு பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இதன்விபரம் வருமாறு:-

★ கிராம சேவையாளர் பிரிவுகள்:-

ஜே/ 291 –கைதடி தெற்கு, ஜே/ 294-நாவற்குழி மேற்கு, ஜே/295- நாவற்குழி கிழக்கு, ஜே/311-மட்டுவில் நுணாவில், ஜே/297-கைதடி நாவற்குழி, ஜே/ 309 - கைதடி நுணாவில், ஜே/310 தென் மட்டுவில்.

★ சமுகமளிக்க வேண்டிய நிலையம்:–

கைதடி கோப்பாய் வீதியில் அமைந்துள்ள கைதடி சமநல சேவை காரியாலயத்தில் தற்போது இயங்கிவரும் சிவில் இணைப்பு காரியாலயம்.

★ கிராம சேவையாளர் பிரிவுகள்:-

ஜே/ 302- சங்கத்தானை, ஜே/303- கச்சாய் வடக்கு, ஜே/304- மட்டுவில் கிழக்கு, ஜே/319- மீசாலை மேற்கு, ஜே/345- மந்துவில் கிழக்கு, ஜே/346- மந்துவில் மேற்கு.

★ சமுகமளிக்க வேண்டிய நிலையம்:-

மீசாலையில் அமைந்துள்ள சிவில் நிர்வாக காரியாலயம்.

கிராம சேவையாளர் பிரிவுகள்–

ஜே/322- அல்லாரை, ஜே/324- கச்சாய்.

★ சமுகமளிக்க வேண்டிய இடம்:–

அல்லாரையில் அமைந்துள்ள சிவில் நிர்வாக காரியாலயம்.

★ கிராமசேவையாளர் பிரிவு:-

ஜே/317-சரசாலை வடக்கு

★ சமுகமளிக்க வேண்டிய நிலையம்:- யாக்கரு சந்திக்கருகில்.

மேற்படி மக்களின் போக்குவரத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (உ-3)

# அதிகாரிகளிடையே இழுபறி இராணுவ நடவடிக்கை உடனடியாக நடைபெறாது?

(கொழும்பு)

படைத்தரப்பு உயர்மட்டத்தவர்களிடையே முடிவு எடுப்பதில் காணப்படுகின்ற இழுபறி நிலை காரணமாக, தற்போதைக்கு உடனடியாக இராணுவ நடவடிக்கைகள் எதனையும் இராணுவத்தினர் மேற்கொள்ள மாட்டார்களென இராணுவ ஆய்வாளர்கள்கருத்து வெளியிட்டுள்ளனர்.

நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக்சோல் ஹெய்மின் அடுத்த கட்ட சமாதான நகர்வையடுத்தே இராணுவ நடவடிக்கைகள்பற்றித்தீர்மானிப்பதென கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அடுத்தகட்ட இராணுவ நடவடிக்கைகள் இப்போதைக்கு ஆரம்பமாகச் சாத்தியமாகவில்லையென இராணுவ ஆய்வாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை அக்கினிச் சுவாலை ஒன்று தோல்வியை அடுத்து யாழ் மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா மற்றும் முன்னாள் இராணுவப் பேச்சாளர் சுனில் தென்னக்கோன் ஆகியோர் அமெரிக்கா சென்றுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

# வீதி திருத்தம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் புகையிரதப் பாதைக்குச் சமாந்தரமாகச் செல்லும் வீதி நல்லூர் பிரதேச சபையால் மீள நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இதுவரை காலமும் மண் பாதையாக காணப்பட்ட இவ் வீதிக்கு தற்போது தார் ஊற்றப்பட்டு நிர்மாணிக்கப்படுகின்றது. (உ,104)

# மயானம் பராமரிப்பில்லை

(கல்வயல்)

மானிப்பாய் பிப்பிலி இந்து மயானம் போதிய பராமரிப்பின்றி புல், பூண்டுகள், பற்றைகள் நிறைந்து காணப்படுகின்றது. (உ-111)

# மாகாண மட்ட உதைப் பந்தாட்டம் மட்டு. அணி சம்பியனானது

(சுண்டுக்குழி)

விளையாட்டுத்துறை அமைச்சினால்வடக்கு-கிழக்கு மாகாண அணிகளுக்கிடையில் நடத்தப்பட்டு வரும் பல்வேறு விளையாட்டுப் போட்டித் தொடரில் ஓர் அங்கமான உதைபந்தாட்டப் போட்டி கடந்த 19, 20 ஆம் திகதிகளில் வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் துறை உதவி அத்தியட்சகர் கே. டபிள்யூ விமலராஜா நெறிப்படுத்தலில் மட்டக்களப்பில் உள்ள 'வெபர்' விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

மன்னார், வவுனியா, அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய ஆறு மாகாணங்களின் அணிகள் இதில் கலந்து கொண்டன.

19 ஆம் திகதி இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் திருகோணமலை அணி அதனை எதிர்த்தாடிய வவுனியா அணியை 4:3 என்ற கோல்க் கணக்கில் வென்றது.

இரண்டாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் மட்டக்களப்பு அணி அதனை எதிர்த்தாடிய யாழ்ப்பாண அணியை 3:1 என்ற கோல் கணக்கில் வென்றது.

மூன்றாவதாகஇடம்பெற்ற ஆட்டத்தில் மன்னார் அணி அதனை எதிர்த்து ஆடிய திருகோணமலை அணியை 2:1 என்றகோல்கணக்கில்வென்று இறுதி ஆட்டத்தில் ஆட தகுதி பெற்றது.

நான்காவது ஆட்டத்தில் அம்பாறை அணியை எதிர்த்தாடிய மட்டக்களப்பு அணி 5:2 என்ற கோல்கணக்கில் வென்று இறுதி ஆட்டத்தில் ஆட தகுதிபெற்றது.

இறுதி ஆட்டத்தில் மன்னார் அணி அதனைஎதிர்த்து ஆடிய மட்டக்களப்பு அணியை 4:2 என்ற கோல் கணக்கில் வென்று இவ்வருடச்சம்பியன் ஆனது.

இவ் ஆட்டத்திற்கு மத்தியஸ்தர்களாக பார்ஞூஸ் எவ் எ டேவிற், எஸ் அமென் ஆகியோர் கடமையாற்றினார்கள். இறுதி நாள் நிகழ்வில் மட்டக்களப்பு மேலதிக அரசாங்க அதிபர் மௌனகுருசாமி கலந்து கொண்டு சிறப்பித்தார். (உ-110)

# கசிப்பு ஒழிப்பு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இன்று புதன்கிழமை யாழ். மாநகரசபையின் ஏற்பாட்டில் கசிப்பு ஒழிப்பு சம்பந்தமான ஒரு கூட்டம் நாவலர்கலாசார மண்டபத்தில் பி.ப 4.00 மணிக்கு நடைபெறும். (ந-9,10)

# புதிய கட்டடம் அமைப்பு

(கல்வயல்)

வல்வெட்டித்துறை கொற்றாவத்தைப் பகுதி மக்களின் நன்மை கருதி நவீன வசதிகளுடன் கூடிய சுகாதார நிலையக் கட்டடம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

கருத்துரை மண்டபம், நோயாளர் பரிசோதிக்கும் அறை ஆகியன அமைக்கப்பட்டுள்ளது. (உ-111)

# காட்சிப் போட்டி

[யாழ்ப்பாணம்]

கரப்பந்தாட்ட காட்சிப் போட்டி இன்று பிப 4.30 மணிக்கு நல்லூர் விநாயகர் விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இப் போட்டியில் கே.கே.எஸ்.வி.க எதிர் யா/மாவட்ட அணிகள் மோதவுள்ளன. (உ-10)

# விசேட கலந்துரையாடல்

(மந்திகை)

சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆசிரியர்களுக்கான வைகாசி மாத சம்பளம் வழங்கலும் விசேட கலந்துரையாடலும் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு கரவெட்டி ரலன்ற் கல்வி நிலையத்தில் இயங்கும் மேற்படி பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

அன்றையதினம் வரவுச் சான்றிதலுடன் ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் திருமதி சிறீ சிவநாதன் அறிவித்துள்ளார். (உ-23)

# கணனிப்பிரிவு அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் நிறுவனத்தில் கணனிப் பிரிவு கற்றல் கற்பித்தல் மூலவள நிலையம் என்பன அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு வரும் ஞாயிற்றுக்கிழமை 27 ஆம் திகதி நிறுவன அதிபர் த. தவராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும், சிறப்பு விருந்தினராக யாழ். மத்திய கல்லூரி அதிபர் க. இராசதுரையும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

# பாதீனியம்ஒழிப்புபணியில் மத்திய கல்லூரி மாணவர்

(ஆவரங்கால்)

யா/மத்திய கல்லூரியின் இடைநிலை விஞ்ஞானக் கழகத்தினர் கடந்தவாரம் பாதீனியம் ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

மேற்படி விஞ்ஞானக் கழகப் பொறுப்பாசிரியர் தலைமையிலான நூற்றிஐம்பதுபேர் கொண்ட மாணவர் குழுவினர் கோப்பாய் பிரதேச செயலகம், நிலாவரை ஆகிய பகுதிகளில் பாதீனிய ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

மேற்படி கழகத்தின் அடுத்த கட்ட நடவடிக்கையாக பாதீனியக்களை தொடர்பான ஆய்வுகள், ஒழிப்பு முறைகள், ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பான ஆய்வுகள் இடம்பெறவுள்ளன. (உ-75)

# அபி. தொண்டர்களுக்கான பயிற்சிநெறிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட அபிவிருத்தித் தொண்டர்களுக்கான பயிற்சி நெறிகள் யாவும் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கான பயிற்சி நெறிகள் யாழ் பற்றீசியன் இன்ஸ்ரியூட் நிறுவனத்திலும் தண்ணீர் தொட்டிபடியில் உள்ள மத்தியிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன (உ- 10)

# மட்டு. மாவட்டத்தில் யுத்த நிறுத்த காலத்தில் 29 பேர் கைதாகினர்

[வவுனியா]

விடுதலைப் புலிகள நான்கு மாதகாலம் ஒரு தலைப்பட்சமாக யுத்த நிறுத்தம் செய்திருந்த வேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் 29 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு மட்டக்களப்பு பிராந்திய அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் ஒன்பது பேர் விசாரணைகளின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (உ-5)

# கிழக்கிலங்கை செல்லும் பூப்பந்தாட்ட அணிவிபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இருந்து நாளைய தினம் கிழக்கு இலங்கை செல்லும் பூப்பந்தாட்ட அணியின் பெயர் விபரம் வருமாறு.

எஸ். அருட்செல்வன், என். கெங்காதரன், எஸ். சிவதாஸன் எஸ். பஸ்கரன், எஸ். ஜெகஜீவன, எஸ். கண்டீபன், என் குணதாஸன், எம். மோகனதாசன் ஆகியோர் (உ-10)

# நிரந்தர நியமனம்

(கந்தர்மடம்)

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் இதுவரை தற்காலிகமாக பணியாற்றி வந்த 22 சமுர்த்தியாளர்கள் "சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் 2 க்கு" நிரந்தர நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதத்தை தெல்லிப்பழை பிரதேச செயலர் திருமதி தி. பத்தினியம்மா கடந்த செவ்வாய்க்கிழமை அலுவலகத்தில் வைத்து வழங்கினார். (உ-37)

# அன்னையர் தினத்தில் அன்பளிப்பு

அன்னையர் தினத்தையொட்டி நவாலி ஊன்றுகோல் அறப்பணியகத்தினர் விதவைகளுக்கும் வறுமைக்கோட்டின்கீழ் வாழும பெண்களுக்கும் சேலைகள வழங்கி கௌரவித்தனர்.

நவாலி வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் கடந்த 13 ஆம் திகதி த. நாகலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற ஆசிரியரும் சமாதான நீதவானுமாகிய க.ம செல்வரத்தினம் கலந்து கொண்டு உரையாற்றினார். (உ-120)

# தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்

## வினா இல-18

### ஆக்கம்: எஸ். எஸ். பவான்

★ **பின்வரும் பந்தியை வாசித்து கீழ் காணும் வினாக்களுக்கு விடை தருக.**

பாவம் அந்தச் சிறுவன்: அதிகாலை அவனை நித்திரை விட்டு எழச் செய்து படி படி என ஓசையிட்டபடி தாயும், தந்தையும் குரல் கொடுக்க சோகமுகத்துடன் எழுந்து புத்தகத்தை விரித்தபடி அரை குறைத் துயிலில் பாடத்தை ஆரம்பிக்கின்றான் அந்த பத்து வயது நிரம்பிய சிறுவன்.

01) இச் சிறுவன் கல்வி கற்கும் தரம் எத்தனை?
02) உறக்கம் என்பதற்கு இப்பந்தியில் இருந்து ஒத்தசொல் தருக?
03) இப்பந்தியில் வரும் அடுக்குத் தொடர் ஒன்று தருக?
04) இங்கு காணப்படும் இணை மொழி ஒன்று?
05) பெயர்ச் சொற்கள் இரண்டு தருக?

★ **வித்தியாசமான சொல்லைத் தெரிந்து கீறிடுக.**

06) வடிவு, அவலட்சணம், எழில, வனப்பு;
07) கண், வதனம், நயனம், விழி.
08) கமலம், பங்கயம், அல்லி, தாமரை;

★ **கீழ்காணும் படத்தில் கீழ் காணப்படும்குணங்கள் உடைய வரைத தேடி கண்டு பிடியுங்கள்.**

| | | |
|---|---|---|
| K<br>உண்மை | A<br>வீரன் | M<br>கோளை |
| A<br>கோளை | K<br>அறிவாளி | E<br>உண்மை |
| E<br>வீரன் | M<br>உண்மை | A<br>அறிவாளி |

09) உண்மை என்பவன் யார்? ☐
10) கோளை என்பவன் யார்? ☐
11) வீரன் என்பவன் யார்? ☐
12) அறிவாளி என்பவன் யார்? ☐

13) செங்கட்டிகள் 5 ஓர்மேசையில் வரிசையாக அடுக்கப்பட்டுள்ளன. ஒரு செங்கட்டியின் நீளம் 15cm ஆயின் மேசையின் நீளம் என்ன?
14) 2kg படியை தராசில் இடும் போது மறுபக்கமுள்ள பொருள் மேலே உயர்ந்தது. ஆயின் அத்தராசில் உள்ள பொருளின் நிறை கீழ் கண்டு அதன் கீழ்க் கோடு இடுக.
1) 3kg 2) 2kg 3) 1kg
15) மைதானத்தில் Aயும், Bயும் இருபக்கமாக ஓட ஆரம்பித்தனர் ½ பகுதியில் A என்பவன் Bயைச் சந்தித்தால் முதலில் ஓடி முடிப்பவன் யார்?

★ **உரோம இலக்கத்தில் எழுதுக.**

16) 48 ————
17) 29 ————
18) 19 ————
19) 35 ————

20) பிரபாவின் கடிகாரம் பி. ப: 4.45 மணி காட்டிய போது கமலனின் கடிகாரம காட்டிய நியமநேரம் என்ன?
21) சுபா தனது கடிகாரத்தை முகம் பார்க்கும் கண்ணாடியில் பாாகும் போது கணணாடியில் 10.00 மணி காட்டியது. அவனின் கடிகாரம் அப்போது உண்மையான நேரம் என்ன?
22) வீதியில் பச்சை, சிவப்பு, மஞ்சள், நீலம் ஆகிய வரிசையில் மின்குமிழகள் 65 ஒளிர்ந்தன. அங்கே இறுதியாக ஒளிர்ந்த மின்குமிழ் நிறம் என்ன?
23) வீதியில் 11 மின் கம்பங்கள் நாட்டப்பட்டுள்ளன; இங்கே எத்தனை இடைவெளிகள் காணப்பட்டன?
24) இரண்டு இடைவெளிகளு ஓர் காவல்காரன் நின்றால் தேவைப்படும காவல்காரன் எத்தனை பேர்?
25) ஓர் மின் கம்பத்தில் இருந்து அடுத்த மின்கம்பம் வரை நடக்க 5 நிமிடம் எடுத்தால் 11 வது மின்கம்பம் செல்ல எடுக்கும் நேரம் எத்தனை நிமிடம்?

★ **பின்வரும் உதாரணத்தைப் பார்த்து கீழ்வரும் இலக்கங்களுக்குரிய சொல்லைக் கண்டுபிடித்து கோட்டில் எழுதுக.**

உதாரணம

| 762-படகு | 543-மரம் |

26) 263 ———— 27) 563 ————
28) 763 ———— 29) 5, 2, 6, 3 ————

★ **தமிழ் சொற்களுக்கு ஆங்கில சொல் தருக.**

30) தொப்பி ———— 31) வானம ————
32) அலுவலகம் ———— 33) மீன் ————
34) ஆணி வேர் உள்ள தாவரங்கள் 2 தருக;
1) ———— 2) ————
35) காற்றால் பரவும் நோய்கள் 2 தருக;
1) ———— 2) ————
36) நிறையுணவு கிடைக்கும் ஓர் உணவுப் பொருள்?
1) ———— 2) ————
37) பட்டங் கட்டத் தேவைப்படும் பொருள்கள்;
———— ———— ———— ————
38) இலங்கைக் கொடியில் செம்மஞ்சள் குறிப்பது,
————
39) இலங்கையில் நீண்ட நதி எனப்படுவது;
————
40) தலை கீழாக உறங்கும் பிராணி ஒன்று;

# புலமைப் பரிசில் பரீட்சை

## வினா இல- 17

### அதி கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்

1) அ. விஸ்ணுராஜா, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
2) த. சாளினி, துன்னாலை ஞானாசாரியார் கல்லூரி
3) இ. சாஜிபானு, கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்
4) இ. பாமா, துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை
5) சி. துவாரகன், எழுதுமட்டுவாள் சின்னத்தம்பி மகாவித்தியாலயம்.
6) பா. சாயிஷங்கர், வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி
7) ஸ்ரீ சுதர்சிகா, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
8) இ. டில்றுக்ஷன், தாவடி இ.த.க. பாடசாலை
9) ஆ. திவ்வியா, கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
10) ச. மயூரா, கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
11) த. துவாரகன், துன்னாலை ஞானாசாரியார் கல்லூரி
12) அ. சிவறஞ்சன், தாவடி இ.த.க. பாடசாலை
13) சு. பிரமிலா, வட்டு. திருநாவுக்கரசு வித்தியாலயம்
14) யோ. வர்சிகா, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்
15) ப. தாமரா, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை
16) சி. சுஜாகரன், கொக்குவில் சி.சி.த.க. பாடசாலை
17) க. கஜந்தன், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
18) வி. ஜெயதீபா, நயினாதீவு நாகபூஷணி வித்தியாலயம்
19) தி. கிருபன், கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
20) இ. ஸ்ரீராம், சாரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயம்
21) ஞா. தேன்மொழி, வல்வை. மகளிர் மகாவித்தியாலயம்
22) அ. கடோற்கஜன், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை
23) கு. மேரியசிந்தா, யாழ். திருக் குடும்ப கன்னியர்மடம்
24) சி. நிருபா, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி
25) ஜெ. ஜெனித்தா, நயினாதீவு நாகபூஷணி வித்தியாலயம்
26) சி. பிரணவன், மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை
27) க. நிரோஜினி, யாழ். புனித மரியாள் வித்தியாலயம்
28) வி. மிதிலா, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
29) வா. பிரணவன், வல்வை அ.மி.பாடசாலை
30) ஞா. ரகுவர்மன், வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
31) லூ. அலன்டியந்தா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
32) வி. கோகுலன், சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்
33) பா. தனுஷா, கொக்குவில் சி.சி.த.க. பாடசாலை
34) கி. சுஜாதா, தேவரையாழி இந்துக் கல்லூரி
35) பா. துஷியந்தன், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
36) ம. லவண்ராஜ், புற்றளை மகாவித்தியாலயம்
37) அ. நிருபன், துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை
38) ம. யாழினி, வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி
39) ம. அனோஜினி, தாவடி இ.த.க. பாடசாலை
40) பா. கௌசிகா, தாவடி இ.த.க. பாடசாலை
41) அ. வசிகரன், அல்வாய் றோ.க.த.க பாடசாலை
42) ச. நிவேதிகா, கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
43) சி. கஜந்தினி, சாவ. இந்து ஆரம்பப் பாடசாலை
44) யோ. அபிநயா, தேவரையாழி இந்துக் கல்லூரி
45) சு. கோகுலன், புற்றளை மகாவித்தியாலயம்
46) த. டயானி, மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
47) து. ரயூவன், சண்டிலிப்பாய் றோ.க.த.க பாடசாலை
48) ப. அபிதாஜினி, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை
49) ம. மேரிறெபிக்கா, யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம்
50) நா. தமிழினி, பெரியபுலம் மகாவித்தியாலயம்
51) கு. ஜெசாமினி, தாவடி இ.த.க. பாடசாலை
52) க. கிரிசாந், பெரியபுலம் மகாவித்தியாலயம்
53) ச. பிரவீணா, கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
54) ச. கார்த்திகா, வட்டு. மத்திய கல்லூரி
55) தி. தனம்ஜெபன், கோப்பாய் நாவலா வித்தியாலயம்
56) சி. பகீரதி, வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி த
57) யோ. செபஸ்ரியன், அளவெட்டி றோ.க.த.க பாடசாலை
58) இ. பிரதிகா, சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயம்
59) சி. லகீசன், மானிப்பாய் சென்ற் ஆன்ஸ்
60) நா. அனோஜினி, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை
61 சு. தாரணி, அல்வாய் சந்திர மௌலீச வித்தியாசாலை

## கல்விப் பகுதி
## வினா இல- 18

"வலம்புரி"
இல: 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ..................
சொந்த முகவரி: ..................
கற்கும் பாடசாலை: ..................
மாணவர் கையொப்பம்: ..................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்.

**குறிப்பு :-**
விடைகளை வேறு தாளில் எழுதிஅனுப்பவும் இதற்கான விடைகளை 28-5-2001 இற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

## புலமை பரிசில் பரீட்சை வினா இல-17 விடைகள்

01] யானை
02] முகம்
03] விழி
04] வானவில்
05] மைனா
06] குரும்பை
07] விட்டை
08] சோறு
09] குருளை
10] மந்தை
11] உற்பத்தி
12] காட்சி
13] புடைவை
14] சூழ்ச்சி
15] ஆண்டவன்
16] மரம் வெட்டி
17] காந்தம்
18] செம்பு
19] ஐங்கோணம்
20] முந்திரிப்பழம்
21] ஜப்பான் (நான்கு வரி)
22] வாடைக் காற்று
23] மான்
24] ஒட்டகச் சிவிங்கி
25] சிகிரியா
26] கெட்டவர்களுக்கு நன்மை செய்தாலும், அவர்கள் எமக்கு கெடுதியையே செய்வார்கள்;
27] செய்கின்ற காரியம் பயனற்றுப் போதல்
28] தனது தகுதிக்கு மீறிய ஆசை கொள்ளல்
29] எமக்குத் துணை எனக் கருதியவரே எமக்கு கெடுதி செய்தல்
30] பிறருக்கு நன்மை செய்த போதும் அவர்களால் எமக்குத் தீமைவிளைதல்
31] சித்தார்த்தன்
32] கோவலன், மாதவி ஆகியோருடைய மகள்
33] குந்தி
34] கண்ணப்ப நாயனார்
35] காரைக்காலம்மையார்
36] 5 பேர்
37] 7 பேர்
38] 10 பேர்
39] 50 பேர்
40] 9 பேர்

## தடுப்புமுகாம் விஜயம்

[யாழ்ப்பாணம்]

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். மாவட்ட அதிகாரி என். ஜீவேஸ்வரா இன்று காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமிற்குச் செல்லவுள்ளார்;

கைதிகளின் உறவினர்களினால் வழங்கப்படும் உணவு மற்றும் கடிதங்கள் என்பவற்றினையும்எடுத்துச்சென்று அங்குள்ள கைதிகளிடம் ஒப்படைப்பார்;

மேலும் கைதிகளினால் வழங்கப்படும் கடிதத்தினை எடுத்து வந்து உறவினர்களிடம் கையளிப்பார்,

(உ-10)

## பருப்பு வழங்கல்

[மந்திகை]

சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளைகளில் நிவாரணத்தின்போது பருப்பு வழங்கப்படாதவர்களுக்கு தற்போது பருப்பு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இதுவரை பருப்புப்பெறாதவர்கள் எதிர் வரும் 25 ஆம் திகதிக்குமுன் பெற்றுக்கொள்ளலாம் என சங்கத்தின்பொது முகாமையாளர் அறிவித்துள்ளார். (உ-23)

## பிரிவுபசார விழா

[யாழ்ப்பாணம்]

யாழ்: மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் இராசா தணிகாசலம் அவர்களுக்கான பிரிவுபசார விழா நேற்று முன்தினம் மாலை 4 மணிக்கு யாழ் மாநகர சபையில் நடைபெற்றது;

மேற்படி விழாவில் புதிய ஆணையாளர் ராமலிங்கம், மேஜர் ரவிராஜ், பிரதி மேஜர், மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்;

(உ-10-9)

## இன்று ஒரு தகவல்

# இறைவன்செயல்எதுவோ?

அரசர் சாலமன் சிறந்த அறிஞராக விளங்கினார். ஒருநாள் அவர் இந்த உலகத்தில் நல்லவர்கள் பலர் ஏழையாகஇருக்கிறார்கள். கெட்டவர்கள் செல்வச் செழிப்பில் மிதக்கிறார்கள். ஒருகுழந்தையைக்கூட காப்பாற்ற வழியில்லாத ஏழைக்கு நிறையக் குழந்தைகள் பிறக்கின்றன. எத்தனை குழந்தைகள் பிறந்தாலும் வளர்க்கக் கூடிய செல்வனுக்கோ குழந்தையே பிறப்பதில்லை. இது கடவுளின் செயலா? அல்லதுசாத்தானின் செயலா? கடவுளின் செயலாக இருக்குமானால் ஏன் இந்த முரண்பாடு? சாத்தானின் செயல் என்றால் கடவுள் ஆற்றலையும் மிஞ்சியது சாத்தானின் ஆற்றலா? என்று சிந்தனையில் ஆழ்ந்தார்.

அன்றுஇரவு உறங்கும்வரை அவரால் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை. காலையில் எழுந்ததும். மீண்டும் இதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டே கடற்கரை ஓரமாக நடந்தார். அன்றும் அவரால் எதையும் முடிவு செய்ய இயலவில்லை. இப்படியே பல நாட்கள் கடந்தன. வழக்கம் போல் ஒரு நாள் காலையில் இதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டே கடற்கரை ஓரமாகநடந்தார். அப்பொழுது கடற்கரையில் இருந்த சிறுவன் ஒருவன்கையிலிருந்தகொட்டாங்கச்சியால் கடல் நீரை மொண்டு கரையில் ஊற்றிக் கொண்டிருந்தான்.

மாலைநேரம் வந்தது. சாலமன் அரண்மனைக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். அந்தச் சிறுவன் தன் வேலையில் கண்ணும் கருத்துமாகஇருந்தான். அவனைப் பார்த்துச் சாலமன் 'தம்பி இருட்டி விட்டதே! வீட்டிற்குப் போக வில்லையா? என்று கேட்டார். அதற்குப் பையன் 'ஐயா! தாங்கள்வந்த வேலைமுடிந்து விட்டது அதனால்வீடுதிரும்புகிறீர்கள்' என் வேலை இன்னும்முடியவில்லை' என்றான்.

வியப்படைந்த சாலமன் 'அப்படி என்னவேலைசெய்து கொண்டிருக்கிறாய்?' என்று கேட்டார். இந்தக் 'கொட்டாங்கச்சியால் கடல் நீரை மறுபக்கம் மாற்றும் வேலையில் ஈடுபட்டுள்ளேன்' என்றான் சிறுவன். உடனே சாலமன் 'தம்பி நீ எவ்வளவு? இந்தக் கொட்டாங்கச்சி எவ்வளவு? கடல் நீர் எவ்வளவு? யாராலும் செய்ய முடியாத செயலாயிற்றே. வீண்முயற்சியைக் கைவிட்டு வீட்டிற்குச் செல்' என்றார்.

அப்போது திடீரென அவர் சிந்தனையில் ஒரு தெளிவு ஏற்பட்டது. 'நம் அறிவைக் கொண்டு கடவுளின்செயலை ஆராய முயல்வதுகொட்டாங்கச்சியைக் கொண்டு கடல் நீரை மாற்ற முயல்வதற்கு ஒப்பாகும்' என்ற உண்மை அப்போது அவருக்கு விளங்கியது.

பேராசிரியர் எ. சோதி

# யாழ். பல்கலைக் கழக சமூக நலச் செயல்களுக்கு ஆதரவு வழங்க தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் அதிகரித்துவரும் சட்டவிரோத மது பாவனையைத் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டு வரும் யாழ். பல்கலைக் கழக சமூகத்தின் செயலுக்கு பூரண ஆதரவினை வழங்குவதாக நேற்றையதினம் நடைபெற்ற யாழ். மாநகர சபைக் கூட்டத்தில் தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகம் மேற்கொண்டுவரும் மேற்படி முயற்சி வெற்றிபெறும் என நம்பிக்கை தெரிவித்த புளொட்டின் மாநகர சபை உறுப்பினர் உ. தவநாதன் இவ்வாறான சமூக சீர்கேடுகளைச் சுட்டிக்காட்டும் பல்கலைக் கழக சமூகத்தின் முயற்சி பாராட்டத்தக்கது என்றார்.

இது தொடர்பாகக் கருத்துக் கூறிய ஈ. பி. ஆர். எல். எவ். இன் மாநகரசபை உறுப்பினர் சுபத்திரன், இவ்வாறான ஆரோக்கியமான செயலுக்கு நாம் ஆதரவு தரத் தயாராகவுள்ளோம்.

அதேவேளை, யாழ் பல்கலைக் கழக சமூகம் வன்முறை சார்பான நடவடிக்கைகளில் ஈடுபடாது பல்கலைக்கழகத்தில் நடைபெறும் சமூகச் சீர்கேடான பகிடிவதையை நிறுத்தவும் முயற்சி எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

அத்துடன், இவ்வாறான சமூக நலச் செயல்களுக்கு உதவிகளை வழங்கத் தயாராகவுள்ளோம் என மேஜர் என். ரவிராஜ் தெரிவித்துள்ளார். (உ-9-10)

## பெருநாள் திருப்பலி

[மந்திகை]

செம்பியன் பற்று புனித பிலிப்னேரியார் ஆலய வருடாந்த பெருநாள் திருப்பலி எதிர்வரும் 26ம் திகதி சனிக்கிழமை காலை 7.00மணிக்கு தும்பளை புனித மரியன்னை ஆலயத்தில் அருட் தந்தை ப.இருதயதாஸ் அவர்களால் ஒப்புக் கொடுக்கப் படும். (உ-23)

## பால்மா விலை அதிகரிப்பு

(கொழும்பு)

பால்மா வகைகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அங்கர் மா ரூ 112 இலிருந்து ரூ 119. நெஸ்ப்பிறே (400 கி.) ரூ. 105 இலிருந்து ரூ 114. ,ஒரு கிலோ அங்கரின் ரூ. 275 இலிந்து ரூ.292 அங்கர். (250 கி.) ரூ.14,50 இலிருந்து ரூ. 79., நெஸ்ரமோல்ற் (400கி.) ரூ.112 இலிருந்து ரூ: 120 வேறு வகை பால்மாக்களின் விலைகளும் உயர்த்தப்பட்டுள்ளன. (க)

## வடமராட்சிப் பகுதியில் காய்ச்சல் பரவுகிறது

(மந்திகை)

வடமராட்சிப்பகுதி வைத்தியசாலைகளில் காய்ச்சல் நோய்க்குச் சிகிச்சைபெறச் செல்வோர்தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

அதிகரித்த வெப்பம்மற்றும் காற்றுக் காரணமாகவே காய்ச்சல் நோய் பரவி வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-23)

## விஜய குமாரதுங்காவின் சிலைநிறுவத் தீர்மானித்த இடத்தில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ். கிளை ஏற்பாட்டின் பேரில் விஜய குமாரதுங்காவின் சிலை நிறுவப்படுவதற்காக ஆஸ்பத்திரி வீதியில் தோண்டப்பட்ட குழி மாநகர சபையினால் சிபார்சு செய்யப்பட வில்லை என்பதைக் காரணங்காட்டி மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுளது.

மேற்படி சிலையினை நிறுவுவதற்கு அதே வீதியில்வேறு ஒரு இடத்தினை மாநகர சபை ஒதுக்கிக் கொடுத்துள்ளதாக தெரியவருகிறது. (உ-9-10)

## யாழ்.மாநகர சபை அம்புலன்ஸ் சேவை விஸ்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்: மாநகரசபையினால் வழங்கப்பட்டு வரும் அம்புலன்ஸ்சேவை தற்போது விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

மேற்படி சேவையை அவசரமாகப்பெறவிரும்பும் யாழ். மாநகர சபை எல்லைக்குள் உள்ள மக்கள்,3556 என்ற தொலைபேசி இலக்கத்துடன்தொடர்பு கொண்டு சேவையைப் பெறலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது:

மேற்படி அம்புலன்ஸ் சேவை 24 மணித்தியால சேவையாக விஸ்தரிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. [உ-10-9]

## மிதிவெடியுடன் கூடிய குண்டு வீதியில் கண்டெடுப்பு

(வவுனியா)

மட்டக்களப்பு வாழைச்சேனை வீதிசெங்கல்லடிப் பகுதியில் மிதி வெடியுடன் இணைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று படையினரால் மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இக் குண்டை, வீதிகண்காணிப்புப்பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீட்டுள்ளனர். (உ-5)

## பனையில் ஏறியவர் வீழ்ந்து படுகாயம்

(மந்திகை)

பனையில் ஏறியபோது தவறி வீழ்ந்தவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சமரபாகு உடுப்பிட்டியைச் சேர்ந்த கட்டையன் கனகசிங்கம் (வயது 29) என்பவரே இவ்வாறு படுகாயமடைந்தவராவார். (உ-23)

## அஷ்ரப்பின் மரணம் விசாரிக்கஆணைக்குழு

(கொழும்பு)

ஹெலி விபத்தில் மரணமடைந்த முஸ்லிம் காங்கிரசின் முன்னாள் தலைவரும் அமைச்சருமான எம்.எச்.எம் அஷ்ரப்பின் மரணம் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளவென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனிநபர் ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்துள்ளார்.

ஓய்வுபெற்ற நீதியரசர் எல். ஜி. வீரசேகர இவ்விசாரணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்;

இதேவேளை விசாரணைக் குழு அமைக்கவேண்டுமென முஸ்லிம் காங்கிரஸ் அரசை கோரி வந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-5)

## லங்கா சீமெந்து நிறுவன ஊழியர்களுக்கான சம்பளகொடுப்பனவு இன்று

(யாழ்ப்பாணம்)

லங்கா சீமெந்து நிறுவன ஊழியர்கள்கடந்தவருடம்ஒக்டோபர் முதல்ஜனவரி மாதம் வரையான 5 மாதங்களுக்குரிய சம்பளக் கொடுப்பனவுகள் இன்றுபுதன்கிழமைகாலை 9 மணி தொடக்கம் ஒருமணி வரை யாழ்ப்பாணம் வர்த்தக வங்கிக் கிளையில்வைத்து வழங்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கையினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

## புத்தர் சிலைகளை திருடும் எத்தர்அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

தொல் பொருட்களைச் சூறையாடும் கொள்ளையர் குழு, குருநாகலில் உள்ள எத்தண்ட விகாரையின் நான்கு புத்தர் சிலைகளின் தலைகளை உடைத்து எடுத்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக விகாரையின் அதிபதி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதேவேளை, அண்மையில் கடலதெனிய ரஜமகா விகாரையில் இருந்து புத்தர் சிலையின் பெறுமதிமிக்க பாகங்கள் சில திருடப்பட்டமை குறிப்பிடத் தக்கது. [உ]

## டாக்டர்களின் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

(கொழும்பு)

அரசாங்க வைத்தியசாலைகளில் பணிபுரியும் உதவி மற்றும் பதிவு வைத்திய அதிகாரிகள் நேற்று முன்தினம் காலைமேற்கொண்ட வேலை நிறுத்தப் பேராட்டம் நேற்று முன்தினம் மாலையே முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

வைத்திய அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சர் செனவிரத்னவுடன் நடத்திய பேச்சுக்களையடுத்து வைத்தியர்களின் வேலைநிறுத்தப்போராட்டம் நேற்றுமுன்தினம் மாலை கைவிடப்பட்டது

வைத்திய அதிகாரிகளின் ஆறு அம்சக் கோரிக்கைகள் தொடர்பாக பரிசீலித்து விரைவில் உரிய நடவடிக்கை எடுப்பதாக சுகாதார அமைச்சர் வழங்கிய உறுதியையடுத்தே போராட்டம் கைவிடப்பட்டது. [இ]

## நெடுங்கேணி பிரதேசத்தில் வெடிப்பொருட்கள் மீட்பு

(வவுனியா)

நெடுங்கேணிப் பிரதேசத்தில் படையினரால் புதைக்கப்பட்ட மேலும் ஒரு தொகுதி மிதிவெடிகள் மற்றும் குண்டுகளை மனிதநேய கண்ணிவெடியகற்றும் குழுவினர் மீட்டெடுத்து அகற்றியுள்ளனர்.

பெரியமடு, மதியமடு, கன்னாசிக்கரந்தன், பூவரசம்குளம், நைநயினாமடு, சின்னநடந்தை, விஞ்ஞானகுளம், குளவிசுட்டான், மாறாயிலுப்பை, கரடிப்புலவு, நெடுங்கேணி தெற்கு, நெடுங்கேணி வடக்கு ஆகிய பகுதிகளிலேயே இம்மீட்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

81 மில்லிமீற்றர் எறிகணைகள்-89, 60 மில்லிமீற்றர் எறிகணைகள்-62, 40 மில்லிமீற்றர் எறிகணைகள்-20, 120 மில்லிமீற்றர் எறிகணைகள் - 8, குண்டுகள் - 4, ஆர்.பி.ஜி எறிகணைகள்-5, ஆட்லறிகள் -5, ஆர். பி. எல் குண்டுகள்-2, கிளைமோர்-8, மிதிவெடிகள் - 50, கைக்குண்டு-1 என்பனவே மீட்கப்பட்டதாக அறியமுடிகிறது. (உ-5)

## தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க போராடியவர் நவம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களை ஏமாற்றி சந்தர்ப்பவாத அரசியல்பேசி, பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றிக் கொள்வதற்காக முதலாளித்துவ சக்திகளுக்கு முட்டுக்கட்டை கொடுத்தவர்கள் போலல்லாது, தான் கொண்ட இலட்சியப் பாதையில் இடதுசாரிகளுடன் ஒன்று சேர்ந்து தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கப் போராடியவர்தோழர் நவம். இவ்வாறுமுன்னைநாள்யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தோழர் க நவரத்தினம் கொழும்பில் காலமானதையிட்டு அரசாங்க பொது சேவையாளர்பொதுச் சங்க யாழ்.மாவட்ட கிளை சார்பாக முன்னைநாள் செயலாளர் செ வீரசிங்கம் அனுப்பி வைத்துள்ள அனுதாபச் செய்திக்குறிப்பில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் வர்க்கப் போராட்டத்தின் மூலமதன் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நோக்கத்தில் மிகவும் பலம்வாய்ந்த இடதுசாரித் தொழிற்சங்கமாகிய அரசாங்க பொதுச்சேவை தொழிலாளர் சங்கத்தின் யாழ் கிளையை ஆரம்பித்து அதன் தலைவராக நீண்ட காலம் செயற்பட்டவர், என்றும் அவ் அனுதாபச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# ஆட்சிக் கவிழ்ப்புக்கு முயன்றனராம் 19 பேருக்கு மரணதண்டனைவிதிப்பு

[லண்டன்]
வளைகுடா நாடான ஹட்டாரில், 1996 இல் ஆட்சிக் கவிழ்ப்புமுயற்சியில் ஈடுபட்டவர்களென குற்றம் சாட்டப்பட்ட 19பேருக்கு அந்த நாட்டின் மேல் நீதிமன்றத்தினால் மரண தண்டனை வழங்கப் பட்டுள்ளது.
மேற்படி மரணதண்டனை வழங்கப்பட்டவர்களுள் அந் நாட்டு மன்னரின் மைத்துனர் ஒருவரும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது.
அத்துடன், மேலும் இருவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

# இஸ்ரேல்-பலஸ்தீன மோதல் குறித்த ஆய்வறிக்கையை அமெ. வெளியீடு

## மோதல் தவிர்ப்புக்கு பரிந்துரைப்பு

(வாஷிங்டன்)
கடந்த 8 மாதகாலமாக இடம்பெற்றுவரும் இஸ்ரேலிய-பலஸ்தீன மோதல் குறித்த அமெரிக்க ஆய்வு அறிக்கை நேற்று முன் தினம் வெளியிட்டுவைக்கப் பட்டுள்ளது.
போர் நிறுத்தத்தை மேற்கொண்டு, ஒரு அமைதி காலத்தை இருதரப்பும் கடைப்பிடித்து அதன்பின்னர் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என மேற்படி அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.
அந்த அறிக்கையில் இரு தரப்பில் எவரின் மீதும் பழி சுமத்தவில்லை ஆனால், நடைபெற்றுவரும் போரினை எவ்வாறு முடிவுக்குக் கொண்டு வரலாம் என்பது பற்றி ஆராயப்பட்டுள்ளது.
மேற்படி அறிக்கையில் யூதக் குடியிருப்பு மீது பலஸ்தீனியர்கள் தாக்குதல் நடத்தக்கூடாதெனவும் காஸா பகுதிக்குள் இஸ்ரேலியர்கள் ஊடுருவக் கூடாதெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
பிந்திக்கிடைத்த தகவலின்படி, ஐ.நா.பொதுச் செயலர் கோபி அனான் மேற்படி அறிக்கையில் சுட்டிக்காட்டப்படும் விடயங்களை இருதரப்பும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் மேலும் இரு தரப்பினரும் பெரும் முயற்சிகளைச் செய்து வன்முறைக்கு முடிவு கட்ட முன்வர வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார். (உ-9)

## இந்தோனேஷியாவில்,

# தற்போதைய ஆட்சி தொடரின் நாடு பிளவுபடும் என எச்சரிக்கை

(ஜகார்த்தா)
இந்தோனேஷியாவில் தொடர்ந்தும் அப்துல்ரகுமான் வாஹிட் பதவியிலிருப்பாரானால் நாடு பிளவுபட்டுவிடும் என்று துணைஜனாதிபதி மேகவதி சுகர்ணோபுத்திரி தெரிவித்தார்.
நாட்டிலே அமைதியின்மையும் பொருளாதாரச் சீர்கேடுகளும் மலிந்து வரும் இவ்வேளையில் மக்கள் அப்துல் ரகுமான் வாஹிட்டிடம் வெறுப்புக் கொண்டிருப்பதால் நாட்டிலேகருத்து வேறுபாடுகளும் பிளவு மனப்பான்மையும் வலுப்பெற்று விடுமென்று மேகவதி சுகர்ணோபுத்திரி தெரிவித்தார்.
இதேவேளை, வாஹிட்டைப் பதவியிலிருந்து விலக வேண்டும் என்று மக்கள் வற்புறுத்துவதும் குறிப்பிடத்தக்கது. (து)

# பார்வையற்றோருக்கு சலுகை வழங்கவும்

[திருச்சி]
பார்வையற்றோருக்கு ஒரு சதவீதவேலை வாய்ப்பை வழங்க வேண்டும் என்று இந்திய பார்வையற்றோர் மேம்பாட்டுச் சங்கம் அரசைக் கோரியுள்ளது.
இச்சங்கத்தின், திருச்சிக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தில் மேலும் பார்வையற்றோருக்கு மாவட்டத்தில் இலவச பேருந்து சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் பார்வையற்றோரின் குழந்தைகளுக்குச் சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் அரசை கேட்டுள்ளனர். (து)

# ஐ. நா. அமைதிப்படையை அனுப்புமாறு கோரிக்கை

## கொங்கோ அதிபர்விடுத்தார்

(இலண்டன்)
ஐக்கிய நாடுகள் அமைப்பு கொங்கோவில் மேற்கொண்டுவரும் சமாதான நடவடிக்கை தொடர்பாக அதிருப்தி தெரிவித்த கொங்கோ அதிபர் ஜோசப் கபிலா 20 ஆயிரம் சமாதானப் படையினை கொங்கோவிற்கு அனுப்பிவைக்க ஐ. நா சபை நடவடிக்கை எடுக்கவேண்டும்என வேண்டுகோள் விடுத்துள்ளார்.
உகண்டா, புருண்டி ஆகிய நாடுகள் கொங்கோ நாட்டு மக்களைப் படுகொலை செய்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
அத்துடன், 2002 இல் கொங்கோவில் பல கட்சித் தேர்தல் இடம்பெற விருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-9)

## காதலில் தோல்வியுற்ற காதலன்

# காதலிக்கு கடிதம் எழுதி சாதனை புரிந்தான்

காதலி வெறுத்து ஒதுக்கியதனால் வரகதியடைந்த காதலன் காதலியை மறக்க முடியாது 327 அடி நீளமான காதல்கடிதமொன்றை எழுதி சோதனையிலும் சாதனை படைத்துள்ளார்.
இவ்வியத்தகு காதல் கடிதச்சம்பவம் இந்திய மேற்கு வங்க மாநிலத்தில் அஜந்தாஸ் நகரில் அனுதமக்காஷெல என்பவரால் நிகழ்த்தப்பட்டுள்ளது.
தனது காதலி தன்னை உதறியபோதும் அவளைநினைத்து கவிதைகள், பாடல்கள் கட்டுரைகள் என தொடர்ச்சியாக ஆறு மாதங்களாக ஒரே இடத்தில் அமர்ந்து 357 அடி நீளத்துக்கு தனது காதல் கடிதத்தை எழுதித் தள்ளியுள்ளார்.
சாதனை வெறுத்த வேளை மரணத்தை தழுவ மனம் நினைத்த போதும் மரணத்தால் பயன் இல்லை வெறுத்த அவள் நினைக்கவென ஒரு சாதனை படைக்க எண்ணியே மேற்படி நீளமான கடிதத்தை எழுதியுள்ளதாக காதலன் கோஷெல் தெரிவித்துள்ளார்.
இதேவேளை கோஷெல்லின் காதல் கடிதம் காதலிக்கும் கிடைத்து அக் கடிதமானது அவர்களது உறவை இணைக்காதாவென லகாதல் உள்ளங்கள் ஏங்குவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## ஆளும் கூட்டணிக்கு ஆதரவு நல்குவதா இல்லையா

# பெர்னாண்டஸ் முடிவெடுப்பார்

(புதுடில்லி)
இந்தியாவின் ஆளும் ஜனதாக் கூட்டணிக்கு சமதாக் கட்சி தொடர்ந்தும் ஆதரவு வழங்குவதா இல்லையா என்பதுபற்றி இன்று முடிவு செய்யப்படும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.
சமதாக் கட்சியின் மேற்படி தீர்மானத்தை எடுக்கும் உரிமையை கட்சியின் சிரேஷ்ட தலைவரும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சருமான ஜோர்ஜ் பெர்னாண்டஸிடம் விட்டுளளதாக சமதாக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
கட்சியின் தேசிய நிறைவேற்றுக்குழு நான்கு மணி நேரம் கூடிப்பேசிய பின்பு மேற்படி தீர்மானம் எடுக்கும் உரிமையை யோர்ஜ் பெர்னாண்டஸிடம் வழங்கியுள்ளதாக மேலும் தெரியவருகிறது. (உ-9)

# வை. கோபாலசாமிக்கு மந்திரிப் பதவி

(புதுடில்லி)
இந்திய மத்திய அமைச்சரவையில் வை. கோபாலசாமிக்கு மந்திரிப்பதவி கிடைக்கவிருக்கிறது.
மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த கண்ணப்பன் தமது பதவியிலிருந்து விலகி வை. கோபாலசாமிக்கு இடம்கொடுப்பாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.
வை. கோபாலசாமிக்கு மத்திய ரயில்வே அமைச்சுப்பதவி கிடைக்கலாமென்று அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன. (து)

# தி.மு.க. ஆட்சியில் திறைசேரி காலி

## நிதியமைச்சர் குற்றச்சாட்டு

[சென்னை]
தி மு க. ஆட்சியினர் திறைசேரியைக் காலியாக்கி விட்டுச் சென்றுள்ளனர் என்று தமிழக புதிய நிதி அமைச்சர் பொன்னையன் குற்றம் சாட்டியுள்ளார்.
கடந்த முறை ஜெயலலிதா முதலமைச்சராக இருந்து விலகிய பொழுது திறை சேரியில் போதிய நிதியிருந்ததென்றும், இப்பொழுது அ.இ.அ.தி.மு.க. பதவி யேற்கும்போது தி.மு.க. திறை சேரியைக்காலியாக விட்டுள்ளது என்றும் தெரிவித்த அவர் தமிழக அரசை செவ்வனே நடத்த வேண்டுமாயின் அதிகளவுநிதியினைத் தனக்கு ஒதுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (து)

## உலக தரிசனம்

# இந்திய - பாக்.வெளியுறவு செயலர்கள் சந்திப்பு

இந்திய-பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர்கள் சந்திப்பு விரைவில் இடம்பெறவிருக்கிறது
சார்க் நாடுகளின் வெளியுறவுச் செயலர்கள் கூட்டம் கொழும்பில் நடைபெற இருப்பதனால் இக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் இந்திய-பாகிஸ்தான்செயலர்கள் சந்திப்பார்கள் என்று தெரிய வருகிறது.
இது பற்றி இந்திய அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் இந்தச் சந்திப்புகள் மகாநாடுகளின்போது ஏற்படுவது வழமைதான் என்று தெரிவித்தார். [து]

## புதுடில்லியில் உலவிய

# குரங்கு மனிதன் வெறும் கட்டுக்கதையாம்

(புதுடில்லி)
புதுடில்லியை பெரும் பீதிக்குள்ளாக்கிய குரங்கு மனிதன் பற்றிய செய்தி வெறும் கட்டுக்கதை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இந்தியத் தலைநகரை கடந்த ஒருவார காலமாக அச்சுறுத்தி வரும் மேற்படி குரங்கு மனிதனை தேடும் நடவடிக்கையில் சுமார் 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட பொலிஸார் ஈடுபடுத்தப்பட்ட போதும் குரங்கு மனிதனைப் பிடிக்க முடியவில்லையெனக் கூறிய பொலிஸ் வட்டாரங்கள் அது கட்டுக்கதையாக இருக்கலாம் எனக் கூறியுள்ளனர்.
இதேவேளை, மேற்படி குரங்குமனிதன், மனிதர்களைக் கடித்தும் குதறியும் காயப்படுத்துவதாக கடந்த வாரம் புதுடில்லியில் பரவிய செய்திகளால் நகரில் ஒரு கோடியே 30 லட்சம் மக்களைப் பீதிக்குள்ளாக்கியது.
அத்துடன் குரங்குமனிதன் துரத்தி வருவதாகக் கூறி மாடிகளில் இருந்து குதித்து 3 பேரளவில் உயிரிழந்துள்ளதுடன் பலர் காயமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது. (உ-9)

## பிரித்தானியாவில்

# புகலிடம் கோருவோர் சட்டம் கடுமையாகும்

(லண்டன்)
பிரித்தானியாவில் புகலிடம் கோருவோருக்கு எதிரான சட்டத்தைக்கடுமையாக அமுல்செய்வதற்கு பிரித்தானிய அரசு முடிவு செய்திருப்பதாகக் கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.
இது தொடர்பாகப் பிரித்தானிய உள் துறைச் செயலாளர் வெஸ்கோ கருத்து தெரிவிக்கையில், பிரித்தானியாவில் அகதி அந்தஸ்த்து கோரி புகலிடம் கோருவோருக்கு எதிராக அங்குள்ளசட்டத்தை தீவிரமாக நடைமுறைப்படுத்த அரசு திட்டமிட்டதுடன், புகலிடம் கோரி விண்ணப்பித்தவர்களுள் அங்கு வாழ்வதற்குக் கட்டுப்படுத்தப்பட்ட அளவில் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.
இதே வேளை பிரிட்டனில் பொதுத் தேர்தல் எதிர் வரும் யூன்மாதம் 7ஆம் திகதி நடைபெறவிருப்பதால்அத்தேர்தலின்பிரசாரத்தில் இந்த அகதிகள் விவகாரம் முக்கிய இடத்தைப் பெறயுள்ளது.
பிரிட்டனில் தொழிற்கட்சி ஆட்சியில் இருந்த போதே இத்தகைய புகலிடம் கோரும் விண்ணப்பம் அதிகரித்திருந்ததாக கன்சர்வேடிவ் கட்சி குற்றம் சாட்டியுள்ளது. இதுவரை 76 ஆரம் பேர் புகலிடம் கோரி விண்ணப்பம் செய்துள்ளனர் (வ)

## அமைச்சர்கள் சந்திப்பு

(லண்டன்)
மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் உள் விவகார அமைச்சர்கள் அதிகரித்து வரும் ஆட்கடத்தல் தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்த ரொமேனியத் தலைநகருக்கும் சென்றுள்ளனர். (உ-9)

எண் என்ப ஏனை எழுத்
தென்ப இவ்விரண்டும் கண்
என்ப வாழும் உயிர்க்கு
- குறள்

# வலம்புரி

## ஆப்பிழுத்த மந்திபோல்

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் எப்படியும் சமாதானத்தை ஏற்படுத்தவேண்டுமென்பதில் நோர்வேத் தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் மும்முரமாக ஈடுபட்டுள்ளார். அதற்காகவே அவர் அமெரிக்காவுக்கு விரைந்து சென்றுள்ளார். உள்நாட்டில் இலங்கை அரசும்-விடுதலைப்புலிகளும் நடத்த வேண்டிய சமாதானப் பேச்சு வார்த்தைக்கு அமெரிக்காவிடம் போக வேண்டிய நிலையில் இலங்கையின் இறைமை இருக்கிறது.

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சை நடத்துவன் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியுமென்ற உண்மை தெரிந்திருந்த போதிலும், வெளியுறவு அமைச்சர் உலக நாடுகளெல்லாம் சென்று விடுதலைப் புலிகளைத் தடைசெய்யுமாறு கோரிக்கைவிட்டிருந்தார்.

அதன் விளைவாக அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் புலிகள் அமைப்பைத் தடை செய்தன. இதனால் அரசு அன்று ஆனந்த மடைந்திருந்தது உண்மையாயினும் இன்று புலிகளைத் தடைசெய்யுமாறு அமெரிக்காவிடமும், பிரிட்டனிடமும் கோரிக்கை விடுத்தது பெரும் தப்பாகிப் போய்விட்டது என்ற முடிவுக்கு அரசு வந்துள்ளது.

இலங்கை அரசுடன்சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதாயின் தம் மீது விதித்துள்ள தடை முழுமையாக நீக்கப்பட வேண்டுமென்பதில் விடுதலைப் புலிகள்உறுதியாகவுள்ளனர்.

இந் நிலையில் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு சொந்தக் காலில் நின்றுதீர்மானம் எடுக்கும் வலுவை அரசு இழந்து விட்டது. அமெரிக்காவிடம், பிரிட்டனிடம் புலிகள் அமைப்பைத் தடை செய்யுமாறுகோரிக்கைவிடுத்து அதில் வெற்றியும் கண்டதால்தற்போது புலிகள் மீதான தடையை நீக்கிப் பேச்சு வார்த்தைக்கான கதவைத் திறந்து விடுவதற்கு அமெரிக்காவிடம் அனுமதி கேட்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இப்படியொரு மோசமான நிலை அரசுக்கு ஏற்படுமென அரசு ஏற்கனவே கருதியிருந்திருந்தால் வெளியுறவு அமைச்சர் கதிர்காமரின் வெளிநாட்டுப் பயணச் செலவில் கணிசமான அளவை மிச்சப்படுத்தியிருக்க முடியும்.

என்ன செய்வது ஆப்பிழுத்த குரங்கின் நிலையில் இலங்கை அரசு இப்போதுள்ளது.

# உயிரைக் குடிக்கும் கசிப்பின் உற்பத்தியினால்
# உருக்குலைந்த சமுதாயம் உருவாகி வருகிறது

இன்று மனிதனை ஆட்டிப் படைக்கும் அங்கிகளில் ஒன்றாகக் கசிப்பு தோன்றியுள்ளது. யாழ். குடா நாட்டில் பாதீனியத்தைப் போன்று செல்வாக்கு மிக்கதாக இது காணப்படுகின்றது. இறுதியாகத் தொகுக்கப்பட்ட புள்ளி விபரங்களின் படி இவ்வருடம் நான்கு லட்சம் போத்தல் சாராயம் தென்னிலங்கையிலிருந்தும் கொண்டு வரப்பட்டுள்ளது. எனச் சமூக அமைப்புகள் கவலை தெரிவிக்கின்றன. ஆயினும் புள்ளி விபரங்கட்கு மேலதிகமாக உள்ளூர்த் தயாரிப்பான கசிப்பு குடா நாட்டை உலுக்கி வருகின்றது. கிபிர், வெட்டிரும்பு, பட்டை என்ற செல்லப் பெயர்களால் உள்ளூரில் உலா வருகின்றது. இதனால் இலட்சாதிபதியானவர் ஒரு புறம், ஒட்டாண்டி ஆனவர். மறுபுறம். இத்தகைய பெறுமானம் மிக்க கசிப்பின் தயாரிப்பு, பண்பாடு பற்றிச் சற்று நோக்குவோம்.

### எரிகூலி

தண்ணீர், சீனி, ஈஸ்ட் என்பவையே இவற்றின் மூலப் பொருள். சில காலங்களில் விலை குறைவடையும் போது வாழைப்பழம் என்பன சேர்க்கப்பட்டும் இது தயாரிக்கப்படுவதாகவும் கூறப்பட்டது. ஆயினும் காலப் போக்கில் இது கைவிடப்பட்டது. காரணம் பாவனையாளர்களின் அதிருப்தி என அறிய வருகின்றது. மூலப் பொருட்களைப் பயன்படுத்திக் கசிப்புத் தயாரிக்கும் போது தொடர்ந்து எரிக்க வேண்டும். புகைச்சுண்டாது பார்க்க வேண்டும். எரியும் வேகத்தைக் குறைத்தால் தயாரிப்பு பழுதடைந்து விடும். ஒரு பரல் எரிப்பதற்குக் கூலியாக இருநூற்றைம்பது ரூபா வழங்கப்படுகின்றது. ஒருவர் ஒரு நாளைக்கு இரண்டு பரல்களை எரிக்கிறார். எரிப்பதன் மூலம் ஆவியாக ஒரு சிறிய குழாய் மூலம் வரும்

**மூ. வி. வரன்**

கசிப்பு இன்னொரு பாத்திரத்தில் திரவமாகின்றது. அத்துடன் நூற்றுக்கு நூறு வீதம் நீர் கலந்த பின்னர் விற்பனைக்கு வருகின்றது.

### உயர் போதை தருவது

இதைவிட நுளம்புத்திரி, எம்பாம்பவுடர் ஆகியவையும் கூட மூலப் பொருட்கள் ஆவதுண்டு. இவற்றின் மூலம் தயாரிக்கப்படும் கசிப்பு அதி உச்ச போதையைத் தரும். கால் போத்தல் அடித்தால் ஊமையும் கூட உளறுவான். செத்த பாம்பாகக் கிடந்தவன் படமெடுத்தாடுவான் எனக் கூறும் கசிப்புப் பிரியர் முதல் நாள் மாலை அடித்தால் மறு நாட் காலை தலையிடி ஏற்படுமென்றும், இதை மாற்ற மறுநாள் காலை கால்பாதி அடித்தால் அந்த மாதிரியாக இருக்குமென்றான்.

கொழும்புச் சாராயம் குடிப்பது செலவு எனவும் கிபிர் குறைந்த விலையில் நிறைந்த சேவை செய்கின்றது என்றார் மற்றொரு பிரியர். காலையில் தேநீருக்கு பதிலாக கிபிர் அடித்தால் உசாராக இருக்கும் எனக் கூறியதுடன் பாணைச் சாப்பிட்டு விட்டு கசிப்பை அருந்தினால் நண்பகல் வரை போதை உச்சக் கட்டமெனவும் இந்தச் சேவையை சீல் சராயம் ஒரு போதும் செய்யப் போவதில்லை. கசிப்பு அது சாமான் சங்கு என்றார்.

### போத்தலும் பழஞ்சோறும்

மற்றொருவரோ சில்லறையாகக் குடிப்பது நஷ்டம் எனவும் தாம் தொழிலகம் சென்றால் $1\frac{1}{2}$ லீற்றர் சோடாப் போத்தலில் அங்கே நூறு ரூபாவுக்குப் பெற முடியும் எனவும் கிளாசில் வார்த்துக் குடிப்பது தமக்கு திருப்தி தராமையால் போத்தலுடனேயே வாயில் ஊற்றி விடுவதாகவும் இது இரண்டு நாட்களுக்கு தமக்குப் போதுமானது என்று கூறியதுடன் உடம்புக்கு தாக்கம் ஏற்படாமல் அதிகாலை வரட்சியைப் போக்கும் வகையில் பழஞ்சோறு (பழைபசோறு) சாப்பிடுவதனால் உடம்பு குளிரும் என்றார்.

வேறொருவரோ இதைக் கள்ளோடு கலந்து குடித்தால் உடம்பைத்தாக்காது. ஆனால் போதையோ அட்டகாசம் என்ற அவர் சீனியைக் கூடவறுத்தால் அதன் நிறம் சாராயத்தை ஒத்திருக்கும் சில மதுபானச் சாலைகளில் கௌரவமாகக் குடிப்பவர்களுக்கு இவ்வாறு கொடுக்கப்படுகின்றது. ஆனால் அது கொழும்புச் சாராயம் என்றும் ஒரு முறை சிலர் ஒரு கோப்பையில் தேயிலைச் சாயத்தை எடுத்து அதன் மேல் ஸ்பிரிட்டை விட்டு நெருப்பைக் கொழுத்தி பின் அதை அணைத்து ஆறிய பின் அதைக் குடித்துப் போதையின் உச்சக் கட்டத்தை அனுபவிப்பதாக கூறினார்.

### கள்ளில் கசிப்பு எசன்ஸ்

கசிப்பு விற்பனையாளர் ஒருவர் இது பற்றித் தெரிவிக்கையில்; தாம பெறும் இடத்தில் எட்டுப்போத்தல் கள்ளைக் கொள்வனவு செய்தால் $\frac{1}{2}$ போத்தல் முதல் வடி மேலதிகமாகத் தரப்படும். கிக் போதாதவர்கட்கு எசன்ஸ் போன்று அதில் கொஞ்சம் கலப்பதுண்டு. சில வேளை தவறுதலாக அதையே கொடுப்பதும் உண்டு. என்ற தகவலைத் தந்தார்.

இவ்வகையில் இன்று சமூகத்தின் ஒரு அங்கமாக கசிப்பு புரையோடியுள்ளதுடன் இளைஞர் மட்டத்திலும் ஒடி உறவாடுவதைக் காணக் கூடியதாகவுள்ளது. இத்தகைய கெடுதி மிக்க கசிப்பை எல்லோரும் இணைந்து விரட்டிட முன் வருவோம். சமூகத்தை பாதுகாப்போம்.

# சைவசமய விவகாரக் குழுவின் நிர்வாகத்தில்
# தலையிடும் அதிகாரம் யாழ். முதல்வருக்கு இல்லை

யாழ்ப்பாண மாநகர சபையின் முதல்வர் என்.ரவிராஜ் சைவசமய விவகாரக் குழுவிற்கு புதியதொரு நிர்வாக சபையை தெரிவு செய்துள்ளதாகவும், நல்லைக் குமரன் மலரை புதிய நிர்வாகம் வெளியிடுமெனவும் நேற்று முன்தினம் நடந்த மாநகர சபையின் மாதாந்தப் பொதுக்கூட்டத்தில் அறிவித்துள்ளார்.

முதல்வர் ரவிராஜின் இவ்வறிவிப்பு கிட்லர், முசோலினி போன்றவர்களின் உள்ளத்தில் கூட எழாத வக்கிரத் தன்மை அவரிடம் இருப்பது துல்லியமாக எடுத்துக் காட்டப்படுகிறது.

அதுமட்டுமன்றி சைவசமய விவகாரக் குழு ஓர் தனி அமைப்பு என்பதும், நல்லூர் உற்சவகால நடவடிக்கைகளுக்காக மட்டுமே அவ்வமைப்பு யாழ். மாநகர சபையுடன் இணைந்து செயற்பட்டதுஎன்பதையும்அறியாத முதல்வர்சைவசமயவிவகாரக் குழுவைக் கலைப்பதாக அறிவித்துள்ளார். அதிலும் அக்குழுவைக் கலைப்பதற்கு கடந்த மூன்று வருடங்களில் முதல்வர் எவரினதும் ஆசிச் செய்திகள் இடம் பெறவில்லையெனக் காரணம் காட்டியுள்ளார்.

முதல்வர் காட்டிய காரணத்தைப் பார்க்கும்போது 21ம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் நம் மண்ணில் மாதன முத்தாக்கள் இருக்கிறார்கள் என்பதையே குறித்து நிற்கிறது.

நல்லைக் குமரனின் 06 வது மலருக்கு அப்போது முதல்வராக இருந்த திருமதி சறோஜினி யோகேஸ்வரன் அவர்களிடம் வாழ்த்துச் செய்தி கேட்கப்பட்டது.

அவரும் வாழ்த்துச் செய்தி தருவதாகக்கூறி மாநகர சபையின் பொதுசன தொடர்பு அதிகாரியாகவும் குழுவின் செயலாளராகவும் இருந்த இ. இரட்ணசிங்கம் மூலம் வாழ்த்துச் செய்தி தயாரிக்கப்பட்டது ஆனால் அவ்வாழ்த்துச் செய்தியை மேயர் திருமதி சறோஜினி அவர்கள் பார்வையிட்டு கையொப்பமிடுவதற்கு முன்னதாகவே அவர் சுட்டுக் கொல்லப்பட்டுவிட்டார். எனினும், தயாரிக்கப்பட்ட வாழ்த்துச் செய்தி பதிப்பாசிரியரிடம் கொடுக்கப்பட்டது ஆனால் அன்றைய சூழ்நிலையும், முதல்வரால் பார்வையிட்டு கையொப்பம் இடம் பெறாத வாழ்த்துச் செய்தியைப் பிரசுரித்தால் அதற்குரிய ஆதாரம் நிரூபிக்க முடியாதென்ற காரணத்தாலும்.

இரட்ணசிங்கம் உள்ளிட்ட குழுவால் முதல்வரின் வாழ்த்துச்செய்தி பிரசுரிப்பது தவிர்க்கப்பட்டது.

### அன்றைய களநிலமை

யாழ். மாநகர சபையின்முதல்வர் திருமதி சறோஜினி யோகேஸ்வரன் சுட்டுக் கொல்லப்பட்ட போது அவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்வதா விடுவதா என்ற கேள்வியும் பயமும் மாநகர சபையின் அனைத்து ஊழியர்கள் மத்தியிலும் அன்றுஏற்பட்டிருந்தது இதனை முதல்வர் ரவிராஜ் உணர்ந்து கொள்வது கடினமே

ஏனெனில் தற்போது மரண பயம் கொஞ்சம் குறைந்திருக்கிறது. அந்த துணிவால் கடந்த காலங்களில் இருந்த கள நிலைமையை மறந்து. நல்லைக் குமரன் மலர் வெளியான சூழ்நிலையை உணராது அன்று வெளியான மலரை இன்றைய சூழ்நிலையுடன் ஒப்பிட்டுக் கருத்துக் கூறுவது எவ்வகையிலும் நியாயமாகாது. ஆனால் முதல்வர் ரவிராஜுக்கு

ஒன்றை மட்டும் கூறலாம் அது என்னவெனில் தமிழீழ விடுதலைப் புலிகள் எதனை விரும்பவில்லையோ அதனை மக்களும் விரும்பவில்லை அது மட்டுமன்றி புலிகள் விரும்பாதவர்களுடன் உறவு வைப்பதை மக்கள் அன்றல்ல இன்றும் விரும்பவில்லை இது முதல்வர் ரவிராஜ்க்கு கசப்பாக இருந்தாலும் மறுக்க முடியாத யதார்த்தம் என்பதை அவர் உணர வேண்டும்.

### திருமதி யோகேஸ்வரன் தலையிடவில்லை

சைவசமய விவகாரக் குழு யாழ். மாநகர சபையுடன் இணைந்து செயற்பட்டாலும் அதன் பணியில் எவருமே தலையிடவில்லை, காரணம் அக் குழு எந்த விதமான அரசியல் கலப்பற்று ஆத்மீகப் பணியில் மட்டுமே தன்னை அர்ப்பணித்திருந்தது மாநகர சபையின் அப்போதைய ஆணையாளராகவும். தற்போதைய வடக்குக்-கிழக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி ஆணையாளராகவும் இருக்கும் வே. பொ. பாலசிங்கம் அவர்கள் குழுவின் காப்பாளராக இருந்தார். குழுவால் எடுக்கப்படும் எந்தப் பணியிலும் அவர் பெரும் ஒத்துழைப்பு நல்கினார்.

சைவசமய விவகாரக் குழு கற்பூர வாசனையுடையது என்பதை காலஞ் சென்ற சறோஜினி யோகேஸ்வரன் உணர்ந்திருந்தார். அதனால் சைவசமய விவகாரக் குழுவின் எந்தச் செயற்பாட்டிற்கும் அவர் தடைபோடவில்லை. கற்பூர வாசனையை நுகர்வதைத்தவிர. ஆனால் அந்தக் கற்பூர வாசனையை உணர முடியாதவர்கள் இன்று இறைவாநீயே பார்த்துக்

[2ஆம் பக்கம் பார்க்க]

**★ விதுரன் ★**

## குருக்ஷேத்திரம்

# இந்திய போர்க் கப்பல் பாவனைக்கு உதவாது!
## கடற்படையினர் அதிருப்தி

(கொழும்பு)
இந்தியாவிடமிருந்துகடந்த வருடம், இலங்கைக் கடற்படையினரால் பயன்பாட்டுக்கென இருபது மில்லியன் டொலருக்கு கொள்வனவு செய்யப்பட்ட ஏ பி ரிரகப் போர்க்கப்பல் செயற்பாட்டுத் திறனற்றதென கடற்படையினர் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

மேற்படிகப்பலை வெள்ளை யானையென வர்ணித்துள்ள கடற்படையினர் இவ்வருடம் இந்தியாவிலிருந்து கொள்வனவு செய்யவிருந்த கப்பலுக்கான உத்தரவை ரத்துச் செய்யுமாறு அரசாங்கத்தைக் கடற்படையினர் கோரியுள்ளனர். (இ)

## கவிஞர் யாழ் ஜெயம் காலமானார்

[எச்சமோட்டை]
யாழ் ஜெயம் என அழைக்கப்படும் மூத்த கவிஞர் ஆசிரியர் ம விச்ரர் நேற்று அவரது இல்லத்தில் காலமானார். (ந-59)

## தீவகத்தில் புலமைபரிசில் வைபவம்

(யாழ்ப்பாணம்)
புத்தாயிரமாண்டு க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான ஜனாதிபதி சகச்சிர புலமைப்பரிசில் சான்றிதழ் வழங்கும் வைபவம். தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் இன்றுகாலை 10.30 மணிக்குநடைபெறும்.

வேலணைசேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்தியமகா வித்தியாலயத்தில் நடைபெறும் இந்நிகழ்வுக்குபிரதம விருந்தினர்களாக யாழ்பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மற்றும் யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கே.வி.குகேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

## சாரணர் ஒன்று கூடல்

(திருமலை)
திருமலை மாவட்ட சாரணர் சங்கம் நடாத்துகின்ற இரண்டாவது சாரணர்ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் பருத்தித்துறையைச் சேர்ந்த சுமார்40 சாரணர்கள் திருமலைக்குபயணமாகவுள்ளனர்.

திருமலை மாவட்ட சாரணர்சங்கத்தின் சாரணர் ஒன்று கூடல்வைபவம்அடுத்த மாதம்1ம்திகதிமுதல்5ம்திகதி வரை திருமலை சங்கமித்த பௌத்த யாத்திரிகள் விடுதியில் நடைபெறவுள்ளது. (ம)

நாகம்ஸ்
(சுன்னாகம)
எம். ஜி. ஆர்,சரோஜாதேவி நம்பியார் நடித்த
எங்கவீட்டுப் பிள்ளை
11-00, 2-30 பு. நே.
சனி ஞாயிறு பி. ப 6 மணி
(ரீலன்) (கி-1977)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)
யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர், கலாநிதி எஸ். ரி. பி. இராஜேஸ்வரனின் 'யாழ்ப்பாணக் குடாநாட்டினதும் அதன் அயலில் அமைந்துள்ள தீவுகளினதும் தோற்றம்' எனும் நூல் வெளியீடு இன்று மாலை 3-00 மணிக்கு யாழ் நூல்நிலையக் கேட்போர் கூடத்தில் வெளியிடப்படவுள்ளது.

இந்நிகழ்வுக்கு புவியியற் கழகத் தலைவர் எஸ். இரவீந்திரன் தலைமைதாங்குவார். (இ)

அமைச்ச

சமர்ப்பித்துள்ளனர்.

மாவனல்லையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின் சூத்திரதாரி என்று கருதப்படும் அமைச்சர் மகிபாலஹேரத் மீது கொண்டுவரப்படும் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் 26 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான விவாதத்தை உடனடியாக மேற்கொள்ளவேண்டும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியும் சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்காவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன

இதனைத் தொடர்ந்து இன்று பாராளுமன்றம் கூடும் போது கட்சித் தலைவர்களிடம் இவ்விவாதம் குறித்து முடிவு எடுப்பதாக சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இப்பிரேரணை மீதான விவாதம் இன்று எடுத்துக்கொள்ளப்படலாம் என்றும், இப்பிரேரணைக்கு ரெலோ, தமிழ்க் காங்கிரஸ், முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு வழங்கலாம் என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் நிலைப்பாடு என்னவென்று தெரியவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது (வ)

புலிகள்

இனவாதப் போக்கே இந்நிலைக்கு காரணமாக அமைவதால் அதனை நிராகரித்து சமரச சமாதான முயற்சியை ஏற்படுத்த அனைவரும் ஒன்றுபட்டு யதார்த்த நிலைப்பாடொன்றை ஏற்படுத்த வேண்டும்மென்றும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# உயிர்நீத்த தோழர்களின் பெயரால் நிதி சேகரிப்பது மோசடியாகும்
## ஈ. பி. ஆர். எல். எவ் அறிக்கை

(யாழ்ப்பாணம்)
உயிர்நீத்த ஈ. பி. ஆர்.எல். எவ். தோழர்களின்பெயரைப் பயன்படுத்தி ''தியாகிகள்தின ஞாபகார்த்த விளையாட்டு நிதி'' எனும் வகையில் மன்னாரில் அச்சிடப்பட்டபற்றுச் சீட்டைப் பயன்படுத்தி, யாழ்ப்பாணத்தில் வர்த்தகர்களிடமும் பொதுமக்களிடமும் பணம் வசூலிக்கப்படுகிறது.

இப்பண வசூலிப்புக்கும் ஈ. பி. ஆர். எல்.எவ் யாழ். பிராந்திய த. சு. பத்திரன் (றொபேட் தலைமையிலான அமைப்புக்கும், எந்தவிதமான சம்பந்தமுமில்லையென்பதை யாழ். குடாநாட்டு மக்களுக்கும் வர்த்தகர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாறு ஈ. பி. ஆர். எல். எவ் வரதரணியின் யாழ். பிராந்திய அலுவலகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது கடந்த 1997ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஈ பி. ஆர். எல். எவ் யாழ். பிராந்திய அலுவலகம் சுபத்திரனின் தலைமையில்கட்டுப்பட்டு வேலைகளில்ஈடுபட்டு வருகிறது. எமது அமைப்புக்கும் தற்போது நடைபெறும் நிதி சேகரிப்புக்கும் எவ்விதமான சம்பந்தமுமில்லை.

சிலர் தமது சுயலாபங்களுக்காக கட்சியின் பெயரைப் பயன்படுத்தி, நிதி சேகரிப்பில் ஈடுபடுவது மக்களை ஏமாற்றுவதாகும்.

உயிர்நீத்த போராளிகளின் பணிகளை முன்னெடுத்துச் செல்ல முடியாத வக்கற்றவர்கள், அவர்களைக் கௌரவிக்கின்றோமென்று கூறி நிதி சேகரிப்பது மோசடியாகுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

மக்களுக்கு..

இப்பேச்சு வார்த்தைகளின் போது யுத்தநிறுத்தத்தின் அவசியம் பற்றியும் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிக்கான உணவுப் பொருட்களின் தடை நீக்கம் தொடர்பாகவும் சாதகமான முடிவுகள் எடுக்கப்பட்டு நோர்வே தூதுவரிடம் அறிவிக்கப்பட்டிருந்தது

இந்நிலையில் விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்கம் அரசுக்கு பலத்த தாக்கத்தை ஏற்படுத்துமாகையால் அது தொடர்பாக முடிவு எடுக்க முடியாத இக்கட்டான நிலையில் அரசு உள்ளது

எனினும் புலிகள் மீதான தடையை நீக்கவேண்டிய இக்கட்டான நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது என்பதை அமைச்சர்அனுராபிரியதர்சன யாப்பாவின் கருத்து உறுதி செய்துள்ளது.

இந் நிலையில் நாளை கூடும் வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் புலிகளின் தடை நீக்கம் தொடர்பாகவும், புலிகளின் கோரிக்கைகள் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டு சாதகமான முடிவொன்றுக்கு அரசு வரலாமென்று அமைச்சரவை வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளன. [வ]

அமெரிக்கா ...

நடத்தியிருந்தார்.

எரிக் சோல் ஹெய்மும் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் றேமன் ஜோன்சன் ஆகிய இருவரும் அமெரிக்காவில் பிரதிப்பாதுகாப்புச் செயலாளர் மிச்சட் அமிதட்சுடன் இலங்கையின் நிலவரம் குறித்து விரிவாகப் பேசியுள்ளதை கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் உறுதிசெய்துள்ளது.

இதேவேளை அமெரிக்காவில் பேச்சுவார்த்தையை முடித்துக் கொண்டு எரிக் சோல்ஹெய்ம் லண்டன் சென்று அன்ரன் பாலசிங்கத்தைச் சந்திக்கத் திட்டமிட்டுள்ளார். இச்சந்திப்பிற்கான புலிகளின் அங்கீகாரம் இதுவரை தூதுவருக்குக் கிடைக்காமையால் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு தெரியவரும் வரை எரிக் சோல்ஹெய்ம் லண்டனில் தங்கியிருந்து அன்ரன் பாலசிங்கத்துடன் பேசிவிட்டே கொழும்பு வரவுள்ளதாக நோர்வேத் தூதரகவட்டாரங்கள்தெரிவித்துள்ளன. [இ]

## வன்னிப் பகுதியில் தொண்டராசிரியருக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம்

[வவுனியா]
இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆதரவாக நேற்று மூன்று ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடாத்தப்பட்டன.

பூநகரி, மடு, கிளிநொச்சி ஆகியமூன்று பகுதிகளிலுமே இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடாத்தப்பட்டன.

இன்றைய இக்கட்டான யுத்த சூழ்நிலையில் தொண்டர்ஆசிரியர்களின் சேவையை நிரந்தரமாக்கக் கோரியே இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடத்தப் பட்டன.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை கல்விச் சமூகம் பொதுமக்களும் ஏற்பாடுசெய்திருந்தனர் ஊர்வலங்களை ஒட்டி இப்பகுதிவர்த்தகநிலையங்கள்யாவும் மூடப்பட்டிருந்தன. [ம]

## யாழ் பல்கலைக் கழகத்திற்கு மாணவர்களை அதிகரிக்க ஜனாதிபதி இணக்கம்

(யாழ்ப்பாணம்)
யாழ்பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறும் மாணவர்களின்எண்ணிக்கையை அதிகரிக்குமாறு,வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா ஜனாதிபதி சந்திரிக்காகுமாரதுங்காவிடம் கோரியுள்ளார்.

அமைச்சரின் கோரிக்கையை அடுத்து,விசேட ஏற்பாட்டின் கீழ் யாழ் பல்கலைக் கழகத்துக்கு கூடுதலாக மாணவர்களை சேர்க்கும் நடவடிக்கைக்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார். (இ)

பஸ் கட்டணம்.-

யடுத்து நேற்று பாராளுமன்றில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின் போது பஸ் உரிமையாளர்களின்பிரச்சினைகளை அரசாங்கம் தீர்த்து வைக்குமென்றும் அமைச்சர் தெரிவித்தார். [ந-5]

பணிப்பாளர்

இதனையடுத்தே பணிப்பாளர் நேற்று தனதுபதவியை இராஜினாமாச் செய்ததாகவும் எனினும் பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டாமென ஊழியர்கள்கோரிக்கைவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [ந]

### வாகனம் அன்பளிப்பு

முளங்காவில் மருத்துவமனைக்கு நோயாளரின் வசதிகருதிமன்னார்மறைமாவட்ட ஆயர்அதிவண இராயப்புயோசப் வாகனமொன்றைஅன்பளிப்புசெய்துள்ளார். (வ)

### நேர்முகப்பரீட்சை இன்றுநடக்கும்

வடக்குபுனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் நடாத்தப்படும் வானொலிக் கலைஞர்களுக்கானநேர்முகப் பரீட்சையில இன்றுசாவகச்சேரி, நல்லூர், பளை, சண்டிலிப்பாய்,சங்கானை ஆகிய பிரதேசசெயலர் பிரிவுகளில் இருந்து விண்ணப்பித்தவிண்ணப்பதாரிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை வானொலிக் கலைஞர்களுக்கானதேர்வுக்கு விண்ணப்பித்து இதுவரை நேர்முகப்பரீட்சைக்கு சமூகம் கொடுக்காத அனைவரையும் இன்றுகாலை 9.00மணிக்கு யாழ்ப்பாணம் வடக்குபுனரமைப்புஅலுவலகத்திற்குவருமாறும் கேட்கப்பட்டுள்ளது

எழில் குன்றா அழகிய தங்க நகைகளை அசல் 22 கரட்டில்
செய்து பெற்றுக்கொள்ள யாழ் நகரில் .....



நியூ நகுலா ஜுவல்லறி
74, கஸ்தூரியார் வீதி, - - - யாழ்ப்பாணம்
நியூ லலிதாஸ் ஜுவல்லறி
171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
நகுலா நகைமாடம்
241G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
[கி-2003]

இப்பத்திரிகை "வலம்புரி" அன்கோ தொபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர் ...ம் அச்சகத்தில் 2001 ஆண்டு மே மாதம் 23ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.